# தமிழ்

## அடிப்படை
## இலக்கண வினா விடை


தொகுப்பு

**S. S. ANANDAN**

B. A. (Hons.) Dip-in-Edu, S. L. P. S., I. S. A

K. Pirasanthy
A/L (2017)
J/H.L.C

# தமிழ்

A. V. Ariyanayagam J.P.U.M.
Chairman
Delft Pradesa Sabai

# அடிப்படை இலக்கண வினா விடை

[க.பொ.த. (சாதாரண தர / உயர் தர)
வகுப்பு மாணவர்களுக்குரியது]

தொகுப்பு

**S. S. ANANDAN**

B. A. (Hons.) Dip-in-Edu, S. L. P. S., I. S. A

Chairman
Delft Pradesa Sabai

பாடம் :- தமிழ்மொழி

நூற் பெயர் :- இலக்கண வினா விடை

ஆசிரியர் :- சி. சிவநிர்த்தானந்தா

முதற் பதிப்பு :- 1997 யூலை

பதிப்புரிமை :- ஆசிரியருக்கே

பக்க எண்ணிக்கை :- 84

கணணி வடிவமைப்பு
அச்சுப் பதிப்பு :- "அடிக்ஷன் பப்ளிகேஷன்ஸ்"

விலை 90.00

# முன்னுரை

தமிழ் மொழிப் பாட வினாத் தாள்களில் இலக்கண விடய சம்பந்தமான வினாக்கள் விதி வருவித்தல் முறை, விதி விளக்க முறை ஆகிய இருவகைக்குட்பட்டு வினாவப்பட்டாலும் நடைமுறை அம்சங்களை மையமாக வைத்தே அவ் வினாக்கள் அமைக்கப்படுகின்றன. அந்த வகையில் மாணவ சமதாயத்திற்கு பயனளிக்கத்தக்க வகையில் பல்வேறு வகையான வினாக்களைத் தேடித் தொகுத்து அதற்குரிய விடைகளையும் சேர்த்து இச் சிறிய நூலினை ஆக்கியுள்ளேன். இதன் தொடராக மேலும் ஒரு நூலினையும் விரைவில் வெளியிட எண்ணி யுள்ளேன். பரீட்சையை எதிர் நோக்கும் மாணவர் களுக்கு இச் சிறிய நூல் பெரும் பயனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

S. S. ஆனந்தன்

# அடிப்படை இலக்கண
## வினா விடை

(1) காரணப் பெயர் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.

யாதேனும் ஒரு காரணம் பற்றி வழங்கிவரும் பெயராகும்.

அணி (அணியப்படுதலாகிய காரணம் பற்றி)

பறவை (பறத்தலாகிய காரணம் பற்றி)

(2) விகாரப் புணர்ச்சியாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

இரண்டு சொற்கள் புணருமிடத்து நிலைமொழியிலும் வருமொழியிலும் எழுத்துக்களும் சாரியையும் தோன்றல், திரிதல், கெடுதல் என்பவற்றால் விகாரப்படுவது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | + | கொடி | = | பூங்கொடி | (தோன்றுதல்) |
| பல் | + | தலை | = | ப.்.றலை | (திரிதல்) |
| மரம் | + | வேர் | = | மரவேர் | (கெடுதல்) |

(3) பின்வருவனவற்றுள் பொருள் மயக்கம் தரும் வாக்கியத்தைச் சுட்டிக்காட்டி, அப்பொருள் மயக்கத்தை விளக்குக.

அ. சிவகாமி தன்னுடைய வீட்டுக்குச் சென்றாள்.

ஆ. சிவகாமி அவளுடைய வீட்டுக்குச் சென்றாள்.

சிவகாமி அவளுடைய வீட்டுக்குச் சென்றாள்.

இங்கு சிவகாமி தனது வீட்டுக்கா அல்லது வேறொருத்தியின் வீட்டுக்கா சென்றாள் என்ற மயக்கம் தோன்றுகின்றது.

(4) "நடந்தனர்", "நடந்தார்" ஆகிய இருவடிவங்களும் அமைப்பிலும் பொருளிலும் வேறுபடுமாற்றைக் காட்டுக.

| | | |
|---|---|---|
| நட + த் + த் + அன் + அர் | = | நடந்தனர் |
| நட + த் + த் + ஆர் | = | நடந்தார் |

என அமைப்பில் வேறுபடுகின்றன. அவர்கள் சென்றனர் எனவும் அவர் சென்றார் எனவும் (பன்மை, மரியாதை, ஒருமை) பொருளில் வேறுபடுகின்றன.

(5) பின்வருவனவற்றுள் "ஆடியது" என்ற சொல் தொழிற் பெயராக இடம்பெற்றுள்ள வாக்கியத்தைச் சுட்டிக் காட்டுக.

அ. கோதை அழகாக ஆடினாள்.

ஆ. கோதை ஆடியது அழகாய் இருந்தது.

கோதை ஆடியது. அழகாய் இருந்தது.

(6) "கொண்டு", "உடைய" என்பவை எவ்வெவ் வேற்றுமை களுக்குச் சொல்லுருபுகளாவனவென்பதைத் தொடர்களில் அமைத்துக் காட்டி விளக்குக.

"கொண்டு" என்பது மூன்றாம் வேற்றுமைக்குச் சொல்லுருபாக விளங்குகின்றது.

உதாரணம் :- வாள் கொண்டு வெட்டினான்.

"உடைய" என்பது ஆறாம் வேற்றுமைக்குச் சொல்லுருபாக விளங்குகின்றது.

உதாரணம் :- என்னுடைய புத்தகம்.

(7) "படம் பார்த்தேன்" என்பது தொகைநிலைத் தொடரா தொகாநிலைத் தொடரா? விளக்குக.

தொகைநிலைத் தொடர் :-இரண்டாம் வேற்றுமை "ஐ" உருபும், அத்துச் - சாரியையும் தொக்கு நிற்றலால்.

படம் + அத்து + ஐ = படத்தை என விரியும்.

(8) பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் "தான்" என்ற சொல்லின் வகையினையும் பொருளினையும் விளக்குக.

அ. மயூரன் தான் சொன்னான்.

ஆ. மயூரன் தான் சொல்லவில்லை என்று சொன்னான்.

(அ) இடைச்சொல், தேற்றப் பொருள்.

(ஆ) மாற்றுப் பொருள், படர்க்கைப் பெயர்.

(9) "இடி", "கட்டு" ஆகிய தன்வினைகள் பிறவினைகளாகுமாற்றை விளக்குக.

இடிப்பி, கட்டுவி என பி, வி என்னும் விகுதிகளைப் பெற்று பிறவினைகளாக மாறும்.

(10) "தா", "சா" ஆகிய வினைகள் இறந்தகால இடைநிலைகளை ஏற்கும்போது அடையும் வடிவமாற்றத்தை உதாரணங்காட்டி விளக்குக.

<u>தந்து</u> - "தா" என்பது "த" என நெடில் குறிலாகியும்

<u>செத்து</u> - "சா" என்பது "செ" என நெடில் குறிலாகி "எ" கரம் பெற்றும் மாற்றமடையும்.

"சா" என்பதிலுள்ள ஆகாரம் எகரமாக மாற்றமடைந்தது.

உ+ம்: ச் + ஆ = சா என்பது ச் + எ = செ என மாற்றமடைந்து வந்தது.

(11) "திறமையுள்ள புலவன் சிறந்த கவிதைகளை விரைவில் இயற்றுவான்" - இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய் அடைமொழி யாது?

திறமையுள்ள.

(12) பின்வருவனவற்றுள் "இரு" என்பது துணை வினையாக வந்துள்ள தொடர்களைக் குறிப்பிடுக.

கதிரையில் இருக்கிறேன், வந்திருக்கிறேன், வீட்டில் இருக்கிறேன், பிடித்திருக்கிறேன்.

வந்திருக்கிறேன், பிடித்திருக்கிறேன்.

(13) "பசுக்கள் மலைச்சாரலிலே புற்களை மேயப் போயிற்று." இத்தொடரில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்துக.

பசுக்கள் மலைச்சாரலிலே புல் மேயப் போயின.

(14) கடேசி - கடைசி, சமயல் - சமையல், வெய்யில் - வெய்யல், சோம்பேரி - சோம்பேறி என்பவற்றுள் எவை சரியானவை?

கடைசி, சமையல், வெய்யில், சோம்பேறி.

(15) "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல" என்ற பழமொழியில் இடம்பெறும் "ஆல்" என்ற உருபு எவ்வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது என்பதை விளக்குக.

ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு இங்கு ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளில் வந்துள்ளது.

(16) குருவி, கூடு ஆகிய இரு சொற்களும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் எவ்வாறு புணரும் என்பதை உதாரணம் தந்து விளக்குக.

குருவிக் கூட்டுக்கு கல் எறிந்தான். (வேற்றுமைப் புணர்ச்சி வல்ஒற்று மிகுந்துள்ளது)

குருவி கூடு கட்டியது. (இயல்பாகப் புணர்ந்த அல்வழிப் புணர்ச்சி)

(17) வண்டு, பசு ஆகிய இருசொற்களும் உச்சரிக்கப்படுமிடத்து அச் சொற்களின் இறுதியில் எத்தகைய வேறுபாடு தோன்றும்?

வண்டு - இறுதியில் ஒலித்த உகரம் மாத்திரை குறைந்துள் ளது. குற்றியலுகரம் (உயிர்த்தொடர் குற்றியலுகரம்)

பசு - இறுதியில் ஒலித்த உகரம் மாத்திரை குறையாமல் 1 மாத்திரையாகவே ஒலிக்கிறது. அது முற்றியலு கரம்.

(18) "உருத்திகழும் காலம்" என்பதை இருவேறு வகையாகப் பொருள்படுமாறு பிரித்துக்காட்டுக.

I. உருத்து + இகழும் + காலம்

II. உரு + திகழும் + காலம்.

(19) "மிகுதி" என்னும் கருத்தை உணர்த்தும் நான்கு உரிச்சொற் பிரயோகங்கள் தருக.

சால, உறு, தவ, நனி

(20) "கத்தியால் வெட்டினேன்", "நீ வந்தால் தருவேன்" - இவ்விரு வாக்கியங்களிலும் இடம்பெற்றுள்ள "ஆல்" என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருளில் வந்துள்ளது என்பதை விளக்குக.

கத்தியால் - ஆல் கருவிப்பொருள்

வந்தால் - ஆல் நிபந்தனைப் பொருள்

A. V. Ariyanayagam J.P.,U.M.
Chairman
Delft Pradesa Sabai

(21) "அவர் வந்தார்", "அவர்கள் வந்தார்கள்" - இவ்விரு வாக்கியங்களிலும் இடம் பெற்றுள்ள "அவர்", "அவர்கள்" ஆகிய படர்க்கைப் பெயர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை விளக்குக.

அவர் - மரியாதை ஒருமை. இலக்கிய வழக்கில் ஆண் பெண் இரு பாலாருக்கும் பொது. பேச்சு வழக்கில் ஆண் பாலார்க்கு மட்டும் காட்ட வழங்குவது.

அவர்கள் - படர்க்கைப் பன்மைப்பெயர்

அவர் என்பது பேச்சு வழக்கில் ஆண்பாற் பெயர்களை மட்டும் சுட்டுவதற்காக வருகின்றது.

(22) "கண்ணா வா", "கண்ணா வருக" - இவ்விரு வாக்கியங்களிலும் இடம்பெறும் வினைகள் எவ்வெவ் வகைகளைச் சார்ந்தவை?

வா - ஏவல் வினை
வருக - வியங்கோள் வினை

(23) இறந்த காலப் பெயரெச்சத்துக்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

வந்த, ஓடிய, நடந்த, ஏறிய

(24) "அது மற்றம்ம" என்பதில் இடம்பெற்றுள்ள இடைச் சொற்கள் இரண்டினை எடுத்துக்காட்டுக.

மற்று, அம்ம.

(25) "இணை" என்ற சொல் குறிக்கும் இருவேறு பொருள்கள் தருக.

உவமை, துணை, இசைவு, இச்சை, இரண்டு, சோடி, இரட்டை, ஒப்பு, பிணை.

(26) "சேரசோழபாண்டியர்", "நீர்ப்பறவை" என்பவற்றை விரித்து அவை எவ்வகைத் தொகைகள் என்பதைக் கூறுக.

சேரரும் சோழரும் பாண்டியரும் - உம்மைத் தொகை

நீரின் கண் வாழும் பறவை - 7 ம் வேற்றுமைத் தொகை

(27) "ஓ" எனும் இடைச்சொல் உயர்வுச் சிறப்பு, எதிர்மறை, பிரிநிலை ஆகிய பொருள்களில் வழங்குமாற்றிற்கு உதாரண ங்கள் தருக.

ஓ சிறந்த ஆசிரியர் - உயர்வுச் சிறப்பு

உனக்கோ தருவேன் - எதிர்மறை

அவர்களுள் இவனோ நல்லவன் - பிரிநிலை

(28) நான், நீ, தான், தாம் ஆகிய தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது பெறும் மாற்று வடிவங்களை எடுத்துக் காட்டுக.

நான் - என்

நீ - உன்

தான் - தன்

தாம் - தம்

(29) "தெரியாமை" என்னும் சொல்லில் இடம்பெறும் பகுபத உறுப்புக்களை எடுத்துக்காட்டுக.

| | | |
|---|---|---|
| தெரி + | ஆ + | மை |
| பகுதி | எதிர்மறை இடைநிலை | தொழிற்பெயர் விகுதி |

(30) "இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளும் மாணவரின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டும்." இவ் வாக்கியத்திலுள்ள இலக்கணப் பிழையைச் சுட்டிக்காட்டித் திருத்துக.

ஒவ்வொரு பாடசாலைகளும் - ஒவ்வொரு பாடசாலையும் என வரும்.

(31) ஒரு பொருட் பன்மொழி என்பது யாது? இரண்டு எடுத்துக் காட்டுக்கள் தருக.

ஒரு பொருளைக் குறித்து நிற்கும் பல சொற்கள்.

I. சந்திரன், மதி, திங்கள்

II. யானை, கரி, களிறு, நாகம், வாரணம்.

(32) க், ச், ட், த், ஆகியவற்றின் இனவெழுத்துக்கள் யாவை?

க் - ங்
ச் - ஞ்
ட் - ண்
த் - ந்

(33) பால்வழுவமைதி என்பது யாது? இரு உதாரணங்கள் தருக.

அன்பு, மகிழ்ச்சி, மேன்மை, சிறப்பு, கோபம், ஆகியன காரணமாக பால் வழு வரினும் ஏற்றுக்கொள்ளல்.

மகளை "வாடா" எனல். மகனை "அம்மை" எனல். இறைவனை "அம்மையே" எனல்.

(34) வினைத்தொகை என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

காலம் மறைந்து நிற்கும் பெயரெச்சம். (காலம் - கரந்த பெயரெச்சம்)

சுடு சோறு, ஏவுகணை, கடிநாய், குடிநீர், பொரிகடலை, அரிதட்டு

(35) காரணவிடுகுறிப்பெயர் என்பது யாது? உதாரணம் தருக.

காரணம் கருதியபொழுது பல பொருள்களுக்கு வழங்கி னாலும், காரணம் கருதாமல் ஒன்றிற்கே இட்டு வழங்கும் பெயர்.

முக்கண்ணன், முள்ளி, சுறங்கு, நாற்காலி, காற்றாடி, அந்தணன்.

(36) வியங்கோள்வினை விகுதிகள் இரண்டினைக் குறிப்பிட்டு எடுத்துக் காட்டுகளும் தருக.

வியங்கோள் விகுதிகள்.

க - வாழ்க, அருளுக, வருக, ஒழிக.

இய - வாழிய

இயர் - வாழியர்

(37) ஆண்டான், ஆதி, எரிதல், சீதேவி என்பவற்றுக்கான எதிர்ப்பொருட் சொற்களைத் தருக.

அடிமை, அந்தம், அவிதல், மூதேவி.

(38) ஒரே சொல் எச்சமாவும் முற்றாகவும் வழங்குமாற்றை உதாரணத்துடன் விளக்குக.

I. காய்க்கும் மரம் - மரம் காய்க்கும்.

II. கடிக்கும் நாய் - நாய் கடிக்கும்.

III. நாறும் புலால் - புலால் நாறும்.

IV. பறக்கும் பாவை - பாவை பறக்கும்.

(39) இறந்தகால இடைநிலைகள் யாவை? உதாரணங்கள் தருக.

த், ட், ற், ன், - படித்தான், நட்டான், கற்றான், ஓடினான்.

(40) பகாப்பதம் என்பது யாது? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

பிரிக்கவியலாத இடுகுறியான சொற்கள்.

நிலம், நீர், வீடு, மரம், நட, வா, நனி, மன், கொல்.

(41) "வசந்தம்" என்னும் சொல் குறிக்கும் நான்கு பொருள்கள் தருக.

இளவேனில், தென்றற்காற்று, வாசனை, சுகந்தம், இந்திரன் மாளிகை, ஓர் இராகம், சல்லாபம், சுகம், சித்திரைமாதம், வசந்தகாலம், மகிழ்ச்சி.

(42) குழூஉக்குறி என்றால் என்ன? இரு உதாரணங்கள் தருக.

ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளினது சொற்குறியை ஒழித்து வேறொரு சொற்குறியாற் சொல்வது.

சொல்விளம்பி (கள்), வெட்டிரும்பு (கசிப்பு), பறி (பொன்), காரை (ஆடை), சக்கரத்தாழ்வான் (தோசை)

(43) வாக்கியங்களை இணைக்குமிடத்துக் கையாளப்படும் இணைப்பிடைச் சொற்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆனால், ஆகவே, எனவே, எனினும், ஆயினும், உம், போல, மற்றும்.

(44) உருவகம் எவ்வாறு உவமையினின்றும் வேறுபடும்?

<u>உவமையாம்</u> பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு நீக்கி, ஒன்றென்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமைப்படுத்திக் கூறுதல்.

<u>உருவகம்</u> பொருளை மிகுதியும் சிறப்பித்துக் காட்டவேண்டி அதனை உவமைக்குச் சமமாக ஆக்குதல்.

(45) பின்வரும் வாக்கியத்தில் எழுத்துப் பிழைகள் உளவேல், திருத்தி எழுதுக.

பன்சவர்ணக் கிழிகள் மரங்களிலே கூட்டமாக வந்திரங்கின.

பஞ்சவர்ணக் கிளிகள் மரங்களிலே கூட்டமாக வந்திறங்கின.

(46) பால் பகா அ:்றிணைக்கு இரு உதாரணங்கள் தருக.

கண் சிவந்தது - கண் சிவந்தன, மரம் விழுந்தது, மரம் விழுந்தன.

அ:்றிணைக்குரிய ஒருமை, பன்மை விகுதிகளைப் பெறாது வரும் அ:்றிணைப் பெயர்கள் அ:்றிணை ஒன்று பல என்னும் இரு பாலுக்கும் பொதுவாகும்.

(47) கிளி, கமலம், கிள்ளை, யன்னல் ஆகியவற்றுள் இயற்சொல் எது?

கிளி - இயற்சொல்

(48) "மலர்விழி" என்ற தொடர் இருவேறு தொகைகளாக அமையுமாற்றை விளக்குக.

"மலர்விழி" என்ற தொடர் உவமைத் தொகையாகவும், வினைத் தொகையாகவும் அமையும்.

**உவமைத் தொகை** - மலர்போன்ற விழி என விரிந்து நிற்கும்.

**வினைத் தொகை** - மலர்ந்த, மலர்கின்ற, மலரும் விழி என அமையும்.

(49) அகச்சுட்டாக அமையும் மூன்று சொற்கள் தருக.

அவன், இவன், உவன் :

இங்கு அ, இ, உ என்னும் மூன்று சுட்டெழுத்துக்களும் சுட்டுப்பெயர்களை ஆக்கி வந்துள்ளன. இப்பெயர்களில் இருந்து சுட்டெழுத்துக்களைப் பிரித்தால் அவை பொருள் தரமாட்டா. எனவே பிரிக்க முடியாத சுட்டுப் பெயர்களே அகச்சுட்டுப் பெயர்கள் எனப்படும்.

(50) "உறாஅர்க்குறுநோய் உரைப்பாய்" என்பதில் அமைந்துள்ள அளபெடையை விளக்குக.

உறாஅர்க் ..... என்ற சொற்றொடரில் அமைந்துள்ள அளபெடை செய்யுளிசை அளபெடை / உயிரளபெடையாகும்.

செய்யுளிலே ஓசை குறையுமிடத்து உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்துக்கள் ஏழும் தத்தமக்குரிய மாத்திரையினின்றும் நீண்டு ஒலிக்கும். இவ்வாறு ஒலித்தல் உயிரளபெடை எனப்படும். இங்கு "உறார்க்கு" என்பதில் "ஆ" தனக்குரிய மாத்திரையினின்றும் கூடி ஒலிக்கிறது. அளபெடுத்தலுக்கு அடையாளமாக அதன் குறிலாகிய "அ" பக்கத்தே இடம்பெறுகிறது. இவ்வுயிரளபெடையின் மாத்திரை மூன்றாகும்.

உறாஅர்க்குறு நோய் உரைப்பாய் என்பதில் சொல்லின் இடையிலே "ஆ" என்ற நெட்டெழுத்து அதற்கினமாகிய "அ" என்ற குறிலெழுத்தை அளபெடுத்து வந்துள்ளது. அதாவது மொழிக்கு இடையில் நெட்டெழுத்து அளபெடுத்து வந்துள்ளது.

(51) "சொல்" என்பது யாது? விளக்குக.

எழுத்துத் தனித்து நின்றும் ஒன்றுக்கு அதிகமான எழுத்துக்களைத் தொடர்ச்சியாகப் பெற்றும் பொருள் தருமாயின் அது "சொல்" எனப்படும்.

(52) "பெரும்படை" என்பதில் அமைந்துள்ள தொகையினை விளக்குக.

பெரும்படை - பண்புத்தொகை. பெருமை ஆகிய படை ஆகிய என்கின்ற பண்புருபு தொக்கு நின்றது.

(53) "பார்த்தனன்" என்னும் சொல்லில் அமைந்துள்ள பகுபத உறுப்புக்களைத் தெளிவு படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பார்த்தனன் :- | பார் + | த் + | த் + | அன் + | அன் |
| | பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |

(54) தொழிற்பெயர் விகுதிகள் இரண்டினை உதாரணங்காட்டி விளக்குக.

அல், தல், தி

தொழிற்பெயர் - போதல், மறதி, ஆடல்

இங்கு போ என்னும் வினையடியோடு "தல்" எனும் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து "போதல்" எனும் தொழிற்பாட்டைக் குறித்து நிற்கிறது.

"மறதி" - எனும் தொழிற்பெயர் "மற" எனும் வினையடியோடு "தி" எனும் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து உருவானது.

(55) ஒருமை, பன்மை வேறுபாட்டினை உணர்த்தும் உருபுகள் கொண்ட வேற்றுமைக்கு உதாரணங்கள் தருக.

ஒருமை, பன்மை வேறுபாடுகளையுணர்த்தும் உருபுகளைக் கொண்ட வேற்றுமை ஆறாம் வேற்றுமை. ஒருமை - அது, ஆது, பன்மை - அ

உ-ம் - எனது புத்தகம் (அது)
எனாது புத்தகம் (ஆது)
என கைகள் (அ)

(56) "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா" - என்ற தொடரில் அமைந்துள்ள வழுவமைதியினை விளக்குக.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" - எனும் சொற்றொடரில் மூர்க்கன் - உயர்திணை. முதலை - (அஃறிணை.) விடா என அஃறிணை வினைமுற்றுக் கொண்டு முடிவதால் இது திணைவழுவமைதியாகும்.

(57) தெவ்வர், இகம், உலோபி, ஐது ஆகியவற்றுக்கான எதிர்ப்பொருட் சொற்களைத் தருக.

தெவ்வர் - நண்பர்

இகம் - பரம்

உலோபி - வள்ளல்

ஐது - செறிவு

(58) காமனைக் குறிக்கும் நான்கு சொற்கள் தருக.

மன்மதன், அனங்கன், வேனிலான், கரும்புவிலான், உருவிலான்.

(59) ஆயன், குரு, பாணன், தனையன் என்பவற்றுக்கான எதிர்ப்பாற் சொற்கள் தருக ?

ஆயன் - ஆய்ச்சி

குரு - குரத்தி

பாணன் - பாடினி

தனையன் - தனையை

(60) "அவர்", "அவர்கள்" ஆகிய சொற்கள் தமிழில் வழங்கப்படுமாற்றை விளக்குக.

"அவர்", "அவர்கள்" ஆகிய சொற்கள் தமிழில் படர்க்கைப் பன்மை, மரியாதைப் பன்மை, மரியாதையிரட்டைப் பன்மையாக வழங்கப் படுகின்றன.

அவர் - படர்க்கைப் பன்மை, மரியாதைப் பன்மை.

அவர்கள் - படர்க்கைப் பன்மை, மரியாதைப் பன்மை, மரியாதை யிரட்டைப் பன்மை.

(61) "கட்டுவித்தான்", "கட்டுவிப்பித்தான்" ஆகிய பிறவினை களிடையேயுள்ள வேறுபாட்டைக் காட்டுக.

கட்டுவித்தான் :- இப்பிறவினை "வி" என்னும் விகுதியைக் கொண்டு அமைவது. இது ஒருவர் மற்றொருவரைக் கொண்டு செய்வித்தலைக் காட்டுகின்றது.

கட்டுவிப்பித்தான :- இப்பிறவினை "விப்பி" என்னும் விகுதியைக் கொண்டு அமைவதால் இது மூன்றாமவரை அல்லது குழுவினரைக் கொண்டு செய்வித்தலையும் காட்டுகின்றது.

(62) "அதுமற்றம்ம" என்பதில் இடம்பெற்றுள்ள இரண்டு இடைச் சொற்களை எடுத்துக் காட்டுக.

இதில் அது என்னும் வேற்றுமை உருபு இடைச்சொல்லும், மற்று, அம்ம என்னும் தத்தமக்குரிய பொருள் குறிக்கும் இடைச்சொல்லும் இடம்பெற்றுள்ளன.

(63) "ஏவுகணை", "கோட்டுப்பூ" என்பன எவ்வெத் தொகையைச் சேர்ந்தவை என்பதை விளக்குக.

ஏவுகணை :- இது வினைத்தொகை. "உம்" என்னும் விகுதியும், "கின்று" என்னும் இடைநிலையும் தொக்கு வந்தது.
ஏவும் கணை "உம்" விகுதி. ஏவுகின்ற கணை "கின்று" இடைநிலை.

கோட்டுப்பூ :- அன்மொழித் தொகை ஆகும். ஒரு விடயத்தை மையப்படுத்திக் கோட்டுப்பூ என வருகின்றது.

(64) "ஆயாசம்", "எரிதல்", "கோரம்", "சற்குணம்" ஆகியவற்றுக்கான எதிர்ப்பொருட் சொற்களைத் தருக.

ஆயாசம் - அநாயாசம், எரிதல் - அவிதல்/அணைதல்.
கோரம் - சாந்தம், சற்குணம் - துர்க்குணம்.

(65) "கடிநகர்", "கடிமணம் புரிதல்", "கடிகமழ்", "கடியரமகளிர்" ஆகிய தொடர்களில் இடம்பெறும் "கடி" என்னும் உரிச்சொல் முறையே எவ்வெப் பொருள்களில் வந்துள்ளது?

கடிநகர் :- பாதுகாப்பான நகர் என காப்பன என்னும் பொருளில் வந்தது.
கடிமணம் புரிதல் :- மங்களம் என்னும் பொருளில் வந்தது
கடிகமழ் :- வாசனை என்னும் பொருளில் வந்தது
கடியரமகளிர் :- அச்சம் என்னும் பொருளில் வந்தது

(66) ஒரே சொல் எச்சமாகவும் முற்றாகவும் வழங்குமாற்றை உதாரண முகத்தால் விளக்குக.

பறக்கும் - பறவை பறக்கும்
பறக்கும் பறவை

(67) "மா" என்ற திரிசொல் குறிக்கும் நான்கு பொருள்களைத் தருக.

மா - குதிரை, பெரிய, மா எனும் மரம், சிங்கம்.

(68) "ஜலம்" என்ற சொல் "சலம்" என்று வழங்கப்படுவதற்கான காரணத்தை விளக்குக.

"ஜலம்" என்ற சொல் "சலம்" என்று வழங்கப்படுவதற்குரிய காரணம் ஆரிய மொழி எழுத்தான "ஜ" என்னும் எழுத்திற்கு வடமொழி மாற்றொலியாக "ச" என்னும் எழுத்து அமைந்துள்ளது. தமிழில் வடமொழிக் கலப்பினால் "ஜ" என்னும் ஆரிய மொழி தமிழில் "ச" என வழங்கப்படுகின்றது. இதனால் "ஜலம்" சலமாக அமைந்துள்ளது.

(69) "வா", "வருக", "வம்மின்" என்பவற்றுக்கிடையேயுள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுக.

மூன்று சொற்களும் ஒரு பொருளையே உணர்த்தும். வம்மின் என்பது செய்யுள் வழக்கிலும், வருக என்பது எழுத்துத் தமிழிலும், வா என்பது பேச்சுத் தமிழிலும் வரவு என்ற பொருளையே உணர்த்தும்.

(70) "நான் நாளை கொழும்பு போகின்றேன்" - இவ்வாக்கிய அமைப்புச் சரியானதா? எவ்வாறு?

"நான் நாளை கொழும்பு போகின்றேன்" என்ற வாக்கிய அமைப்பு "நான் நாளை கொழும்பு போவேன்" என்றுதான் அமைய வேண்டும். ஆனால் மக்களின் பெரும் செல்வாக்குப் பெற்ற வடிவமாக "நான் நாளை கொழும்பு போகின்றேன்" எனக் காலவழுவமைதியாக இவ்வாக்கியம் அமைகிறது.

(71) இரக்கம், வியப்பு ஆகியவை ஒரே இடைச்சொல்லால் உணர்த்தப்படு வதற்கு உதாரணம் தருக.

ஆகா, ஆ என்பன இரக்கம் வியப்பு என்பவற்றை உணர்த்தும் இடைச் சொற்களாகும்.

இரக்கம், வியப்பு என்பன

ஐயோ! பாவம்
ஐயோ! அவன் அழகு

இங்கு ஓகார இடைச்சொல் இரக்கம், வியப்பு எனும் பொருள்களைத் தந்தது.

ஆ, அ ஐயோ ஆகிய இடைச் சொற்களே இரு பொருளையும் உணர்த்துகின்றன.

இரக்கப்பொருளுக்கு உ+ம்:

ஆ அ கொடிதே அறம். என்கண் மணி போன்ற இராமனை எப்படிக்காட்டுக்கு அனுப்புவேன்.

ஐயோ! எண்னையாரென்று அறியாரோ.

வியப்பு பொருளுக்கு உ+ம்:

ஆ, அ வண்ணங் கலந்த வானவில்லின் வனப்புத் தான். ஐயோ அவன் அழகே அழகு.

(72) காரணப் பொருளில் வரும் பெயரெச்சத்தை விளக்குக.

கரிய குதிரைகள் என்பதில் கரிய என்பது நிறக் காரணத்தை உணர்த்திய குறிப்பு வினைப் பெயரெச்சமாகும்.

காரணப்பொருளில் வரும் பெயரெச்சங்கள் உண்ட களைப்பு, விழுந்த நோ போன்றவை. இங்கு உண்ட களைப்பு என்பதில் களைப்பு வருவதற்குக் காரணமாக இருந்தது உணவு உண்டதே.

(73) முக்காலமும் உணர்த்தும் வினையெச்சத்தை உதாரணங் காட்டி விளக்குக.

செய என்னும் வினையெச்சம் முக்காலமும் காட்டும்.

உ-ம் :-

| | |
|---|---|
| (காரணப்பொருள்) | (1) மழை பெய்யக் குளம் நிறைந்தது - இறந்த காலம். |
| (உடன் நிகழ்ச்சிப்பொருள்) | (2) சூரியன் உதிக்க வந்தான் - நிகழ் காலம். |
| (காரியப்பொருள்) | (3) குளம் நிறைய மழை பெய்தது - எதிர்காலம். |

"மாணப் பெரிது" இச்சொல் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களையும் உணர்த்தி நிற்கும் குறிப்பு வினையெச்சமாகும்.

(74) நல்லூர், மூதூர் என்பவை எவ்வாறு காரண இடுகுறிப் பெயர்களாகும்?

நல்லூர், மூதூர் என்பவை காரணங்கருதிய பொழுது எல்லா நல்ல ஊர்களையும், பழைய ஊர்களையும் குறிப்பனவாகவும் காரணங்கருதாத போது இடுகுறியளவாக நின்று நல்லூர், மூதூர் என்று அழைக்கப்படும் ஊரை மட்டும் குறிப்பதாகவும் இருக்கின்றன. அதாவது காரணங்கருதிய போது அக் காரணத்தையுடைய பல பொருள்களைக் குறிப்பதாகவும் காரணங்கருதாத போது இடுகுறியளவாக நின்று ஒரு பொருளையே குறிப்பதாகவும் இருப்பதால் இவை காரண இடுகுறிப் பெயர்களாகும்.

A. V. Ariyanayagam J.P.,U.M.
Chairman
Delft Pradesa Sabai

(75) போலி எழுத்துக்கள் என்பன யாவை? இரண்டு உதாரணங்கள் தருக.

போலி என்பது சொல்லின் தொடக்கத்திலோ, இடையிலோ, இறுதியிலோ ஓர் எழுத்திற்குப் பதில் வேறோர் எழுத்து அமைவது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ-ம் :- | நாயிறு | - | ஞாயிறு | - | முதற் போலி |
| | ஐஞ்நூறு | - | ஐந்நூறு | - | இடைப்போலி |
| | சாம்பர் | - | சாம்பல் | - | கடைப்போலி |

(76) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக.

(அ) முள் + தீது (ஆ) வேல் + நன்மை

"குறிப் வழி வளத்தல் வணையினாய்தம்,
ஆகவும் பெறூஉ மல்வழியானே"

விதி கூறிப்புணர்த்துக.

1) முள் + தீது என்பது இருவழியாகப் புணரும்

1. "குறில் வழி ல, ளத் தவ்வனையின் ஆய்தம் ஆகவும் பெறும் அல்வழியானே" - என்ற விதிப் படி தனிக் குற்றெழுத்தின் பின் நின்ற லகர, ளகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில் வரு மொழியில் தகரம் வந்தால் ஆ்.தவெழுத்தாக மாறுகின்றன.

உ+ம்: முள் + தீது = மு்.டீது.

2. "ல,ள" வேற்றுமைக் கண்றடவும்" - என்னும் விதிப் படி நிலைமொழியீற்றில் வரும் லகர ளகர மெய்கள் வருமொழியில் வல்லினம் வந்தால் லகரம் றகர மாகவும் ளகரம் டகரமாகவும் மாறும்.

உ+ம்: முள் + தீது = முட்டீது.

2. வேல் + நன்மை என்பது புணரும் போது = வேனன்மை என வரும்.

அதாவது தனிக்குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள் வருமொழியில் வந்த லகரம் புணரும் போது னகரமாகத் திரிகின்றன. எனவே

வேல் + நன்மை = வேனன்மை என வருகின்றது.

(77) உயிரீற்று மரப்பெயர் சிலவற்றின் முன் வல்லினம் வரின் இனமெல்லெழுத்து மிகுவதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

மா + காய் = மாங்காய், விளா + காய் = விளாங்காய்

(78) காரணவிடுகுறிப் பெயர் யாது என்பதை ஓர் எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

காரணம் கருதிய பொழுது அக்காரணத்திற்குரிய அனைத்திற்கும் பொதுப் பெயராகவும், காரணம் கருதாத பொழுது ஒரு பொருளுக்கே சிறப்புப் பெயராகவும் அமையும் பெயரே காரணவிடுகுறிப் பெயராகும்.

உ-ம் :- வெள்ளையன்

இது வெள்ளை நிறமுடைய அனைவரையும் குறிக்குமாயின் காரணப்பெயர்.

காரணம் கருதாது ஒருவருக்கு மட்டும் வழங்குமாயின் இடுகுறிப்பெயர்.

(79) விகுதி பெறாது உயர்திணை ஆண், பெண்பால்களை உணர்த்தி வரும் பெயர்கள் இவ்விரண்டு தருக.

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| ஆடூஉ | செவிலி |
| குரிசில் | நங்கை |

(80) இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர் என்பவற்றை விளக்குக.

இருமடி :- கார் பெய்தது

கார் என்னும் நிறத்தின் பெயர் (பண்புப் பெயர்) மேகத்திற்காகி, அது பின்னர் மழைக்காகி வந்தது.

மும்மடி :- கார் விளைந்தது

கார் என்ற நிறத்தின் பெயர் மேகத்திற்காகி, அது பின்னர் மழைக்காகி மழை அக்காலத்து விளையும் நெற்பயிரைக் குறித்தது.

(81) மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபுகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

கருவிப் பொருள் - "கொண்டு"
- வாள் கொண்டு வெட்டினான்.

உடனிகழ்ச்சிப் பொருள் - "உடன்"
- தந்தையுடன் மகன் வந்தான்.

(82) வினைத்தொகை முக்காலத்தினையும் எவ்வாறு உணர்த்துகிறது?

கால இடைநிலைகள் அற்றதால் முக்காலத்திலும் வினைத்தொகை உணர்த்தப்படுகின்றது. (காலம் மறைந்து நிற்றல்)

உ-ம் :- சுடுசோறு, அரிதட்டு

சுட்ட சோறு

சுடுகின்ற சோறு

சுடும் சோறு

(83) எழுவாய்த் தொடருக்கும் வினைமுற்றுத் தொடருக்கும் வேறுபாடு யாது? ஒவ்வோர் உதாரணம் தருக.

பெயர்ச் சொல் அல்லது பெயர்த் தன்மைப்பட்ட சொல். உருபு எதுவும் பெற்றுக்கொள்ளாமல் பயனிலை கொண்டு முடியும் அமைப்பு எழுவாய்த் தொடர் எனப்படும்.

உ-ம் :- கந்தன் வருகின்றான்.

வினை நிகழ்ச்சிக்குக் காரணமான பொருள் செயப்படு பொருள் ஆகும். செயப்படுபொருளுடன் எழுவாய், பயனிலை கொண்டு முடியும் ஒரு வாக்கிய முடிவு வினை முற்றுத் தொடர் எனப்படும்.

உ-ம் :- பாலன் கவிதை எழுதுகின்றான்.

(84) காலவழுவமைதியாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

குறிப்பிட்ட ஒரு கால இடைநிலைகளைப் பெற்று வேறு ஒரு காலத்தில் முடிவு பெறும் வாக்கியமாக அமைந்தும் மக்கள் வழக்கில் செல்வாக்குப் பெற்று வழங்கி வரும் தொடர் காலவழுவமைதித் தொடர் ஆகும்.

உ-ம் :- நாளை வருகின்றேன். இதில் "கின்று" நிகழ்கால இடைநிலை. ஆனால்எதிர்காலம் உணர்த்தும் தொடராகவே இது இன்று பயில் நிலையில் உண்டு.

(85) நடந்தனன் என்னும் பதத்தினைப் பகுத்துக் காட்டுக.

| (பகுதி) | | (சந்தி) | | (விகாரம்) | | (இடைநிலை) | | (சாரியை) | | (விகுதி) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நட | + | த் | + | (ந்) | + | த் | + | அன் | + | அன் |

இப் பகுபதத்தில் த், ந் ஆனது விகாரமாகும்.

(86) "தாயர்", "தாயார்", "தாய்மார்" என்னும் மூன்று வடிவங்களின் அமைப்பினைக் காட்டிப் பொருளினை விளக்குக.

"தாயர்" என்பது "அர்" விகுதி பெற்று மரியாதைப் பன்மை குறிக்கும் சொல். "தாயார்" என்பது "ஆர்" விகுதி பெற்று ஒருமையைக் குறித்து நிற்கும் சொல். "தாய்மார்" என்பது "மார்" எனும் பன்மை விகுதி பெற்றுப் பன்மை உணர்த்துஞ் சொல்.

(87) உம்மையிடைச் சொல், இறந்தது தழீஇய எச்சப் பொருளை யும், எதிரது தழீஇய எச்சப் பொருளையும் தருமாற்றை உணர்த்துக.

உ-ம் :- பூங்கொடியும் வந்தாள். இதில், முன் மங்களா வந்த தல்லாமல் என்னும் பொருளைத் தந்தால் இறந்தது தழீஇய எச்சம். இனி மங்களாவும் வருவாள் என்னும் பொருளைத் தந்தால் எதிரது தழீஇய எச்சம்.

(88) "மழை வந்தாலும் வரும்", "மழை வந்தாலும் வரலாம்" என்னும் தொடர்கள் பொருளில் வேறுபடுமாற்றை எடுத்துக் காட்டுக.

முதலாவது தொடரில் "உம்" இடைச்சொல் உறுதிப்பாட்டுப் பொருள் தருகின்றது.

இரண்டாவது தொடரில் ஐயப்பாட்டுப் பொருள் உணர்த்தப் படுகின்றது.

(89) தமிழிலே கலந்துள்ள போர்த்துக்கேய மொழிச் சொற்களுக்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அலுமாரி, கடதாசி, கதிரை, துப்பாக்கி

(90) தற்பவம் என்பது யாது? விளக்குக.

தற்பவம் என்பது ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும், பொதுச் சிறப்பு எழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வழங்கும் வடமொழி. இது இருவகை. சுத்தி, போகி போன்றவை சிறப்பெழுத்தாலானவை. அரன், ஞானம், செபம் போன்றவை பொது சிறப்பெழுத்தாலானவை.

(91) தொகை நிலைத் தொடர், தொகா நிலைத் தொடர் என்பன யாவை?

I. தமிழில் சொல்லோடு சொல்தொடரும் தொடர்ச்சி மேற் கூறியவாறு இரு வகைப்படும். தொகை நிலைத் தொடர் கள் வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழித் தொகைகள் என ஆறு வகை.

உதாரணம் :- நிலங்கடந்தான், கடிநாய், செந்தாமரை, முதலியன.

II. தொகாநிலைத் தொடர்: எழுவாய், விளி, வேற்றுமைத் தொகாநிலை, வினைமுற்று, பெயரெச்ச, வினையெச்ச, இடைச்சொல், உரிச்சொல், அடுக்குத் தொடர்கள், என ஒன்பது வகை.

உதாரணம் :- சாத்தான் வந்தான், சாத்தா வா, நிலத்தைக் கடந்தான் முதலியன.

(92) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக.

(அ) எள் + நெய் (ஆ) மருந்து + நீர்

எள் + நெய் = எண்ணெய் வருமொழி நகரத்தின் முன்பாகும் ளகரம் ணகரமாகும் என்னும் விதிப்படி எள், எண்ணாகி ணகரத்தின் பின்னே வரும் நகரம் ணகரமாகும் எனும் விதிப்படி நெ, ணெ ஆகியதால் எண்ணெய் எனப்புணர்ந்தது.

மருந்து மென்றொடர் குற்றியலுகரம், அது புணரும் போது மருத்து என வன்றொடராகி மருந்து + நீர் = மருத்து நீர் என்றாகியது.

(93) ஒன்பது என்னும் எண்முன் நூறு எண் வரின் தொள்ளாயிரம் எனப் புணரும் என்று கூறும் இலக்கணகாரர் நிலைமொழி வருமொழிகளில் எவ்வெம் மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர்?

ஒன்பது + நூறு என்பதில் நிலைமொழி ஒன்பதின் "பது" கெடும். முதலுயிரோடு தகர மெய் சேர்ந்து நின்ற னகரம், ளகரமாகவும் வருமொழியாகிய நூறு, ஆயிரமாகவும் திரிந்து தொள்ளாயிரம் என்று ஆகியது.

(94) ஐகாரவீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின் நிலை மொழியீற்று ஐகாரங்கெட்டு அம்முச்சாரியை தோன்றுவதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

1. மாதுளை + காய் = மாதுளங்காய்.
2. தாழை + பூ = தாழம்பூ

(95) தற்கிழமை, பிறிதின்கிழமை என்பன யாவை? அவற்றை வகைப்படுத்திக் காட்டுக.

தன்னோடு ஒற்றுமை உடைய பொருள் தற்கிழமை; தன்னின் வேறாய பொருள் பிறிதின்கிழமை. கிழமை என்பது உரிமை. இவை ஆறாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் உரியவை.

உதாரணம் ஆறாம் வேற்றுமை :-

(i) பண்புத் தற்கிழமை - முருகனது செம்மை
உறுப்புத் தற்கிழமை - முருகனது கை
தொழில் தற்கிழமை - முருகனது வரவு
ஒன்றன் கூட்டத் தற்கிழமை - நெல்லது குப்பை
பலவின் கூட்டத் தற்கிழமை - பறவைகளது கூட்டம்
ஒன்று திரிந்து ஒன்றாய தற்கிழமை - மஞ்சளது பொடி

(ii) பொருட் பிறிதின்கிழமை - முருகனது வேல்
இடப் பிறிதின் கிழமை - முருகனது மலை
காலப் பிறிதின்கிழமை - முருகனது நாள்.

(96) வேற்றுமை மயக்கத்தின் இரண்டு வகைகளையும் தெளிவாக்குக.

1. **உருபு மயக்கம் :-**

"கிழங்கு மணற்கு ஈன்ற முளை என்பதில்" நான்காம் வேற்றுமை கோடற் பொருளுக்குரிய "கு" உருபு வந்த தாயினும் அது இடப்பொருளில் வந்துள்ளமையால் ஏழாம் வேற்றுமைக்குரிய கண் உருவாகத் திரித்துக் கொள்ளல் உருபு மயக்கம்.

2. **பொருள் மயக்கம் :-**

செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமை "ஐ" உருபோடு வருவதே விதி. அரிசியாற் சோறு ஆக்கினான் என்பதில் "ஆல்" உருபு செயப்படுபொருளுக்கு வந்துள்ளது. இதனைச் செயப்படு பொருளுக்குரிய இரண்டாம் வேற்று மைப் பொருளாகவே கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே இது பொருள் மயக்கமாகும்.

(97) பொருளாகுபெயருக்கும், சினையாகுபெயருக்கும் வேறுபாடு யாது? உதாரணந் தந்து விளக்குக.

தாமரை போலும் முகம். என்பதில் தாமரை என்னும் பொருளின் பெயர் அதன் சினையாகிய மலருக்காதலால் பொருள் ஆகுபெயர். வெற்றிலை நட்டான் என்பதில் வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதற் பொருளாகிய கொடியைக் குறித்தலால் அது சினை ஆகுபெயர்.

(98) முன்னிலை ஏவல் வினைமுற்று முன்னிலை வினைமுற்றிலிருந்து வேறுபடுமாற்றை விளக்கி, இரண்டு வகை வினைமுற்றுகளுக்கும் விகுதிகளைத் தருக.

முன்னிலை வினைமுற்று என்றது தன்மை படர்க்கை வினைகளுக்கு இனமாய் முன் நின்றான் தொழிலை (செயலை) உணர்த்தும் வினையாகும்.

உ-ம் :- நீ உண்டி (இ) உண்டனை (ஐ)
உண்டாய் (ஆய்) நீங்கள் உண்டனிர் (இர்) உண்டீர்.

முன்னிலை ஏவல் வினைமுற்று முன்னிலையொன்றற்கே உரியதாய், முன் நின்றானைத் தொழிற்படுத்தும் அதாவது ஏவும் வினையாகும்.

உ-ம் :- நீ உண்டாய் (ஆய்) உண்டனை (ஐ) என வரும்.

இவை இரண்டிலும் ஆய், ஐ உருபுகள் பொதுவாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீ - உண்டாய் - (ஆய்) நீ - உண்டி (இ) எனவரும்.

இவை இரண்டிலும் ஆய்,இ, உருவுகள் பொதுவாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(99) முன், பின் என்னும் இடைச் சொற்கள் எவ்வெப் பொருளைத் தருமெனவும், இன்று எவ்வாறு விகாரப்பட்டும் வழங்கும் எனவும் கூறுக.

இவை காலப் பொருள், இடப்பொருள்களைத் தரும்.

உ-ம் :- எனக்கு முன் பிறந்தான். (காலப் பொருள்) எனக்கு முன் இருந்தான். (இடப் பொருள்) இவை முன்பு, பின்பு என்றும் முன்னை, பின்னை, என்றும் முன்னம், பின்னம் என்றும் விகாரப்பட்டும் வழங்கும்.

(100) "கடிக்கமலம்" - இதற்கு இலக்கணங் கூறி விளக்குக.

கடிக்கமலம் என்பது வாசனை உடைய தாமரை. இது இரண்டாம் வேற்றுமைத் தொகை. கடி - மணம், இகர வீற்று அஃறிணைப் பொருள் முன் வல்லினம் மிகும் என்னும் விதிப்படி கடி கமலம் = கடிக்கமலம் என்றாகியது.

(101) இடவழுவமைதியாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகை. "உன் தாய் இதைச் செய்வேனோ." தாய் என்னும் படர்க்கைச் சொல் செய்வேனோ என்னும் தன்மையில் முடிந்தது. இது இடவழுவமைதியாகும். "நீயோ அவனோ யார் இது செய்தார்." எனப் படர்க்கைப் பயனிலை முன்னிலை பெற்று வருதலும் இடவழுவமைதியாகும்.

(102) அன்மொழித் தொகையாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் தம் பொருள் உணர்த்தாது பிறிது பொருள் உணர்த்துவன. ஆகுபெயர் ஒரு மொழியிடத்து வரும். அன்மொழித் தொகை இருமொழியிடத்து வரும். பொற்றொடி வந்தாள் என்பது பொன்னாலாகிய ஆபரணத்தை உணர்த்தாது அதனை அணிந்துள்ள பெண்ணை உணர்த்தும் போது அது அன்மொழித் தொகை.

வேற்றுமைத் தொகை முதலிய ஐந்து தொகை நிலைத்தொடர் மொழிகளிடத் தேயும் பிறந்து அவையல்லாத பிறபொருளை உணர்த்திவருவது அன்மொழித் தொகையாகும்.

உ + ம் : பொற்றொடி வந்தாள் என்பதில் பொற்றொடி என்பதில் பொற்றொடி பொன்னால் ஆகிய ஆபரணத்தை உணர்த்தாது அணிந்துள்ள பெண்ணையே உணர்த்தி வருவதால் பொற்றொடி அன்மொழித் தொகையாகும்.

(103) "ஒரு பொருட் பன்மொழி" என்பது யாது? உதாரணந் தந்து விளக்குக.

சொல்லின்பங் கருதி ஒரு பொருள் மேல் இரு சொற்கள் தொடர்ந்து வருவதாகும்.

உ-ம் :- நாகிளங் கமுகு, நாகு என்பதும் இளம் என்பதும் ஒரே கருத்துடையவை.

(104) "மரவேலி" என்னும் தொடர் தரும் பொருள்களுள் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

மரத்தால் ஆகிய வேலி என்னும் பொருள் தரும் போது மூன்றாம் வேற்றுமைத் தொகை. மரத்துக்கு இட்ட வேலி என்னும் பொருள் தரும் போது நான்காம் வேற்றுமைத் தொகை.

(105) சாரியையாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

**சாரியையாவது** :- பகுபத உறுப்பாகவும், புணர்ச்சியிலும் எழுத்துக்களை உச்சரிக்கும்போதும் சிலவேளை வரும் இடைச்சொல்.

உதாரணம் :

1. இரண்டு பிள்ளை - இரட்டைப் பிள்ளை இப்புணர்ச்சியில் வந்துள்ள ஐ சாரியையாகும்.
2. கிளியினை என்பதில் இன் சாரியை ஐ வேற்றுமை உருபு
3. நடந்தனன் = நட + த் + த் + அன் +அன் இதில் அன் சாரியை
4. அ = அகரம், இதில் கரம் சாரியை.

காலங்காட்டும் இடைநிலைக்கும் விகுதிக்குமிடையே வந்துள்ள அன் சாரியை.

(106) முற்றாய்தம் என்பது யாது? உதாரணந் தந்து விளக்குக.

முற்றாய்தம் என்பது :- தனக்குரிய அரை மாத்திரை முழுமையாக வந்துள்ள ஆய்த எழுத்து. புள்ளி வடிவிலாகிய ஆய்தம் குற்றெழுத்துக்கு முன்னதாய் உயிரோடுகூடிய வல்லெழுத்து ஆறினுள் ஒன்றன் மேதாய் வரும்.

உ+ம் : அ.்.து, ப.்.றி போன்றன.

(107) ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெறும் எழுத்துக்கள் யாவை?

ஒரு மாத்திரையை பெறும் எழுத்துக்கள் :-

உயிர்க்குறிலாகிய அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்து எழுத்துக்களும் இவை ஏறிய (18 x 5) உயிர் மெய் எழுத்துக்களுமாம்.

உ-ம் :- க, இ முதலியன

இரு மாத்திரை பெறும் எழுத்துக்கள் :-

உயிர் நெடிலாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ ஆகிய ஏழு எழுத்துக்களும் இவை ஏறிய (18 x 7 = 126) உயிர் மெய் எழுத்துக்களுமாம்.

உ-ம் : ஆ, கா முதலியன.

(108) வேற்றுநிலை மெய்மயக்கமாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

வேற்றுநிலை மெய்மயக்கமாவது :-

18 மெய்யெழுத்துக்களில் ஒன்று வேறோரு மெய்யெழு த்தோடு கூடிவருதல். எல்லா மெய்யெழுத்துக்களும் எல்லா மெய்யெழுத்துக்களோடும் மயங்குவதில்லை. சிலவே மயங்கும்.

உ-ம் :- முயற்சி / க்த் மயங்கா

(109) ஓரெழுத்து மொழியாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

ஓரெழுத்து மொழியாவது :- தமிழ் எழுத்துக்களில் ஏதாவதொன்று தனித்து நின்றே பொருள் உணர்த்துதல்.

உதாரணங்கள் : தை = தை மாதம்: (பெயர்) தைத்தல்.
(ஏவல் வினை) வா, போ, கை, ஆ, ஈ

(110) பிறவினை விகுதிகள் யாவை? உதாரணந் தந்து விளக்குக.

பிறவினை விகுதிகள் :- வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

| உதாரணங்கள் :- | **தன்வினை** | **பிறவினை** | **பிறவினை விகுதி** |
|---|---|---|---|
| | செய் | செய்வி | வி |
| | படி | படிப்பி | பி |

(111) தற்சமம் என்பது யாது? விளக்குக.

தற்சமம் என்பது :- தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்களாலாகித் தமிழிலே வழுங்கிவரும் வட சொற்கள்.

உதாரணம் :- சந்தனம், குங்குமம், கமலம்

(112) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக.

(அ) பனை + காய் (ஆ) வட்டம் + மேசை

(அ) பனை + காய் = பனங்காய்.

இதில் நிலைமொழி பனை என்னும் மரப்பெயர். வருமொழி முதல் எழுத்து காய் என்பதிலுள்ள வல்லினம். ஆகவே சிறப்பு விதிப்படி ஐகெட்டு அம் சாரியை வந்து அதன் ஈறு இனத்தோடு உறழ்ந்து பனங்காய் என வந்தது.

(ஆ) வட்டம் + மேசை = வட்ட மேசை.

இதில் நிலை மொழி வட்டம் என்பதிலுள்ள மகரம் வரு மொழியாகிய மேசையிலே மகரம் வந்தமையால் கெட்டு இயல்பாகப் புணர்ந்தது.

(113) வினையாலணையும் பெயராவது யாது? உதாரணந் தந்து விளக்குக?

வினையாலனையும் பெயராவது :-

வினைமுற்றுப் பெயரைப் போல வேற்றுமை உருபேற்றுப் பெயர்ச்சொல் போல வருதல்.

உதாரணம் :- வந்தானைக் கண்டேன் என்பதில் வந்தான் என்னும் வினைமுற்று இரண்டாம் வேற்றுமை உருபேற்றுப் பெயர்போல வினையால் அணைந்த பெயராயிற்று.

குறிப்பு வினையாலணையும் பெயர் :- கரியானை

(114) "ஓடும் குதிரை" - இதற்கு இலக்கணங் கூறி விளக்குக.

ஓடும் குதிரை :-

இதில் வந்துள்ள ஓடும் என்பது செய்யும் என்னும் வாய்ப்பாட்டு எதிர்காலப் பெயரெச்சமாகும். இதன் இறந்தகாலம் ஓடிய குதிரை, நிகழ்காலம் ஓடுகின்ற குதிரை என்பனவாகும். இது எதிர்காலங்காட்டும் பெயரெச்சத் தொகாநிலைத் தொடர் என பெயர் பெறும்.

(115) சொல்லுருபாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

**சொல்லுருபானது :-** வேற்றுமை உருபாக வரும் இடைச் சொல்லுக்குப் பதிலாக வேற்றுமையில் வந்து பொருளை வேறுபடுத்திக் காட்டும் சொல்லாகும்.

உதாரணம் :- "தந்தையோடு மைந்தன் வந்தான்" என்பதில் மூன்றாம் வேற்றுமை "ஓடு" உருபுக்குப் பதிலாக "உடன்" என்னும் சொல்லுருபு பின்வருமாறு வருதலாகும்.

தந்தையுடன் மைந்தன் வந்தான்.

(116) இடவாகு பெயராவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

இடவாகு பெயராவது :-

இடத்தின் பெயர் அவ்விடத்தைக் குறிக்காது அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைக் குறித்து வருத லாகும்.

உதாரணம் :- இங்கிலாந்து வென்றது.

இதில் இங்கிலாந்து என்பது அவ்விடத்திற்குரிய விளையாட்டு வீரர்களைக் குறிக்கின்றது.

(117) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற்றாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை முற்றாவது :-

படர்க்கை, முன்னிலை, தன்மை, ஆகிய மூவிடங்களையும் தன்மை இடத்தில் உள்ளடக்கி வரும் பன்மை வினை முற்றாகும்.

உதாரணம் :- மனிதராகிய நாம் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக மதிக்கின்றோம். மனிதர் படர்க்கைப் பன்மை, நாம் தன்மைப் பன்மை இவை இரண்டும் இணைந்து முன்னிலைப்பன்மையையும் உளப்படுத்தி மதிக்கின்றோம் என்ற உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுப் பெற்றுள்ளன.

(118) திணை வழுவாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

திணை வழுவாவது :-

நரி வந்தது என்பதை நரி வந்தார் என்றால் திணைவழு. அதனை நரியார் வந்தார் என்றால் திணை வழுவமைதியாகி இலக்கண விதிக்குப் பொருந்துவதாகும்.

(119) "கடி" என்னும் உரிச் சொல்லைக் குறிக்கும் இரு குணங்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

"கடி" என்னும் உரிச் சொல்லைக் குறிக்கும் இரு குணங்கள்;

(1) கடிமணம் -
(2) கடிநகர் -

காப்பு, கூர்மை, விரைவு, விளக்கம், அச்சம், சிறப்பு, ஆகிய பல குணங்களைக் குறிக்கும் உரிச்சொல் கடி.

(120) வினா எழுத்துக்கள் யாவை? உதாரணந் தந்து விளக்குக.

வினா எழுத்துக்கள் : எ, யா, ஆ, ஓ, ஏ என ஐந்தாம்.

உதாரணம் : எவன்? யாவன்? (எ, யா முதலில் வந்தன)
கந்தனா? கந்தனோ? (ஆ, ஓ, ஈற்றில் வந்தன)
ஏது? கந்தனே? (ஏ முதலில் ஈற்றிலும் வந்தது)

(121) அளபெடை என்றால் என்ன? விளக்கி உதாரணந் தருக.

பாட்டில் ஓசை குறைந்தவிடத்து சில எழுத்துக்கள் தம் மாத்திரைகளில் அதிகமாக ஒலிப்பதே அளபெடை. உயிரெழுத்துக்கள் மிக்கொலித்தால் உயிரளபெடை. ஒற்றெழுத்துக்கள் மிக்கொலித்தால் ஒற்றளபெடை என அளபெடை இரு வகைப் படும். உயிரளபெடை மொழிக்கு முதல் இடை கடையிலும், ஒற்றளபெடை இடை கடையிலும் வரும்.

உதாரணம் : ஆஅடை (ஆ அளபெடுத்தது. அ அடையாளம்)
சங்ங்கு (ங் அளபெடுத்தது. ங் அடையாளம்)

(122) உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திற்கும் நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கும் உதாரணங்கள் தந்து விளக்குக.

குற்றியலுகரம் அதன் அயலெழுத்தின் வகையைக் கொண்டு ஆறு வகைப்படும். அவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் மாத்திரம் இரண்டே இரண்டு எழுத்தில் உயிர் நெட்டெழுத்தின் பின் வரும். ஏனையவை மூன்று எழுத்திலும் அதற்கு மேலும் வரும்.

உதாரணம் : உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் : வரகு, பலாசு
நெடிற்றொடர்க் குற்றியலுகரம் :நாகு, ஆடு

உயிர் குற்றெழுத்து, நெட்டெழுத்தின் பின் மூன்றெழுத்தில் பலாசு வந்தமையால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகும்.

இங்கு ஈற்றுக்கு அயல் எழுத்து உயிரெழுத்தால் தொடரப்பட்டு வந்துள்ளதால் உயிர்த்தொடர்க்குற்றியலுகரம். அடுத்தது ஈற்றுக்கு அயல் எழுத்து நெட்டெழுத்தால் மட்டும் தொடரப்பட்டு வந்துள்ளதால் நெடிற்றொடர்க் குற்றியலுகரமாகும்.

(123) ஐயன் - அய்யன். இவ்விரு சொற்களுக்கிடையே காணப்படும் வேறுபாடு யாது?

அகரத்தோடு இகர, யகர மெய் இரண்டுஞ் சேர்ந்து ஐகாரம் என்னும் ஒரெழுத்தாக ஒலிக்கும். (ஐயன் என்பது அய்யன் என வருதல்) சந்தியக்கரமாகும். ஐயன் என்பதில் வந்துள்ள நெட்டெழுத்து ஐ மொழி முதலில் வந்து ஐகாரக் குறுக்கமாகி ஒரு மாத்திரையே ஒலிக்கின்றது. அய்யன் என்பதில் உயிருக்கு ஒரு மாத்திரையும், மெய்க்கு அரை மாத்திரையுமாகி ஒன்றரை மாத்திரை ஒலிக்கின்றது. இவையிரண்டும் பொருளால் ஒன்றாயினும் எழுத்தாலும், ஒலி மாத்திரையாலும் வேறாகும்.

("ஐ" என்பதற்கு "அய்" போலியாகவும் வரும்.)

(124) பகுபதம், பகாப்பதம் என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.

பகுபதம் பகுதி, விகுதி எனப் பகுக்கக் கூடிய தன்மையுள்ள சொல். அங்ஙனம் பகுக்க முடியாத தன்மையுள்ள சொல் பகாப்பதம்.

பகாப்பதம் முறையே பெயர், வினை, இடை, உரி என நான்கு வகை.

உ-ம் : நிலம், நட, மற்று, நனி

**பகுபதம்** : பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரு வகைப்படும்.

உ-ம் : பொன்னன் = பொன் + அன் - பெயர்ப் பகுபதம்

நடந்தனன் = நட + த் + த் + அன் + அன் - தெரிநிலை வினைப்பகுபதம்

நட (பகுதி) த் (சந்தி - விகாரம்) த் (இறந்தகால இடைநிலை) அன் (சாரியை) அன் (விகுதி) என பகுபத உறுப்புக்கள் ஆறும் வந்துள்ளன.

(125) செயற்பாட்டு வினைக்கு இரண்டு உதாரணங்கள் தந்து விளக்குக.

செயப்பாட்டு வினைக்கு இரண்டு உதாரணங்கள் :

1. மாடு கந்தனால் அடிக்கப்பட்டது.
2. கள்வன் காவலரால் கட்டுண்டான்.

படு, உண் என்பன செயப்பாட்டு வினைக்குரிய இரு விகுதிகளாகும். இவை முறையே அடிக்கப்பட்டது, கட்டுண்டான் என்பதில் வந்தன. இவை முறையே மாடு, கள்வன் என்னும் முதலாம் வேற்றுமைக்குரிய எழுவாய்கள் அச் செயல்களைப் படுவன என்பதைக் காட்டுகின்றன. இதனால் செயலைச் செய்த

எழுவாயான கந்தன், காவலர் என்பன மூன்றாம் வேற்றுமை ஆல் விகுதி பெற்றுக் கருத்தாப் பொருளில் வந்துள்ளன. இவை செய்வினை வாக்கியமாகும் போது முறையே கந்தன் மாட்டை அடித்தான் எனவும் காவலர் கள்வனைக் கட்டினர் எனவும் வரும். எனவே செய்வினையில் வரும் எழுவாய் செயப்பாட்டு வினையில் மூன்றாம் வேற்றுமையாகவும், இரண்டாம் வேற்றுமையில் வந்த செயப்படுபொருள் எழுவாயாகவும் மாற்றம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

(126) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்தி எழுதுக.

அ. கல் + எறிந்தான் ஆ. நிலம் + தீ

அ. கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

கல் : தனிக்குற்றெழுத்து முன் வரும் ஒற்றெழுத்தினைக் கொண்ட நிலைமொழி.

எறிந்தான் : உயிரெழுத்தினை முதலெழுத்தாகக் கொண்ட வருமொழி.

இவ்வாறு வரின் நிலைமொழி ஒற்றெழுத்து இரட்டித்து அதன்மேல் வருமொழி உயிரேறி (கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்) எனப் புணரும்.

ஆ. நிலம் + தீ = நிலந்தீ

நிலம் நிலைமொழி, தீ வருமொழி. நிலைமொழி ஈறு(ம்) மெல்லின மெய். அது வல்லின வருமொழி (த) வந்ததால் அதற்கு இனமான (ந்) மெய்யாகியது.இது அல்வழி உம்மைத் தொகை.

(127) காரணவிடுகுறிப் பெயருக்கு ஓர் உதாரணந் தந்து விளக்குக.

**காரண இடுகுறிப் பெயர் :**

காரணங் கருதிய பொழுது பல பொருள்களுக்கும் பொதுவாகவும், காரணங் கருதாது இடுகுறி அளவாய் நின்று ஒரு பொருளுக்கே சிறப்பாகவும் நிற்பதாகும்.

உ-ம் : அந்தணர். அழகிய தண்ணளியுள்ள அனைவரையும் குறிக்கும் போது காரணம் கருதிய பொதுச் சொல்லாகவும், இடுகுறியாகப் பிராமணரை மாத்திரங் குறிக்கும் சிறப்புச் சொல்லுமாகும் ஆதலால் இது காரண, இடுகுறிப் பெயராயிற்று.

(128) இருதிணைப் பொதுப் பெயருக்கு ஓர் உதாரணந் தந்து விளக்குக.

இருதிணைப் பொதுப் பெயருக்கு ஓர் உதாரணம் : தாய்

தாய் இவள் என்னும் போது உயர்திணைக்கும்.
தாய் இப்பசு என்னும் போது அ∴றிணைக்கும்

பொதுவாக வருகின்றமையால் இது இருதிணைப் பொதுப் பெயர் எனப்படும்.

(129) இடப்பெயருக்கும் இடவாகுபெயருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உதாரணந் தந்து விளக்குக.

இடப்பெயர் இடத்தையே குறிக்கும் பெயர்.

உ-ம் : இந்தியா ஒரு பெரிய தேசம்.

இடவாகு பெயர் அவ்விடத்தோடு தொடர்புடைய மற்றொரு பெயரைக் குறிக்கும்.

உ-ம் : இந்தியா விளையாட்டில் வென்றது.

இதில் இந்தியா என்பது இடத்தை நேரே குறிக்காமல் அதனோடு தொடர்புடைய விளையாட்டு வீரரையே குறிப்பதால் இடவாகு பெயராகும்.

(130) இரண்டாம் வேற்றுமைக்குரிய செயப்படுபொருள் எத்தனை வகைப்படும்? இரு வகைகளுக்கு உதாரணந் தந்து விளக்குக.

1. இரண்டாம் வேற்றுமைக்குரிய செயப்படுபொருள் ஆறு வகைப்படும்.

   ஆக்கல், அழித்தல், அடைதல், துறத்தல், ஒக்கல், உடைமை என ஆறு வகைப்படும்.

2. இருவகைகளுக்கு உதாரணம் :

   ஆக்கப்படு பொருள் - அரசன் கோயிலைக் கட்டினான்.

   அழிக்கப்படு பொருள் - அரசன் கோட்டையை இடித்தான்.

(131) எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றை உதாரணந் தந்து விளக்குக.

எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று :

உ-ம் : நடந்திலன்.

தொழில் நிகழாமையை உணர்த்தும் வினையே எதிர்மறை வினை. இறந்தகாலங் காட்டுவதால் தெரிநிலை வினை. "இல்" எதிர்மறையைக் காட்டுகின்றது. நடவான் என்பதில் "ஆ" விகுதி எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது. "வ்" எதிர்கால இடைநிலையாகும்.

(132) உம்மைத் தொகைக்கு இரண்டு உதாரணங்கள் தந்து விளக்குக.

உம்மைத் தொகைக்கு இரண்டு உதாரணம் :

இராப்பகல், இராமலக்குமணர், பால்பழம், உயிர்மெய்

இரவும் பகலும் என்பதிலுள்ள உம் இடைச்சொல் தொக்கு வந்து இராப்பகல் என்றாகியது. இவ்வாறே இராமனும் இலக்குமணனும் என்பது இராமலக்குமணர் என வருதல் உம்மைத் தொகையாகும்.

(133) "உண்டே கடவுள்", "எல்லோரும் வந்தார்". இவ்விரு வாக்கியங்களிலும் வரும் ஏகார இடைச்சொல்லும் உம்மை இடைச்சொல்லும் எவ்வெவ் பொருளிலே வந்துள்ளன?

1. உண்டே கடவுள் - இதில் கடவுள் உண்டு என்பன உறுதியாக உணர்த்த ஏகார இடைச்சொல் வந்துள்ளதால் இது தேற்றப் பொருளைக் குறிக்கின்றது.

2. எல்லோரும் வந்தார் - முற்றுப் பொருள்

(134) வினைமுற்றுத் தொடரை உதாரணந் தந்து விளக்குக.

உண்டான் கண்ணன்.

உண்டான் என்பது வினைமுற்று. அதனைத் தொடர்ந்து அதன் எழுவாயாகிய கண்ணன் வருவதனால் இது வினை முற்றுத் தொடர். இந்நிலை மாறிக் கண்ணன் வந்தான் என வரின் அது எழுவாய்த் தொடராகக் கருதப்படும்.

(135) அகச்சுட்டு, புறச்சுட்டு என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.

**அகச்சுட்டுக்கு உதாரணம்** :- அவன், இவன், உவன்

**புறச்சுட்டுக்கு உதாரணம்** :- அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு

சுட்டெழுத்துக்கள் அ, இ, உ என மூன்றாம். இவை அவன், இவன், என்பவற்றில் சொல்லின் அகத்தே வந்தமையால் அகச்சுட்டு அவ்வீடு என்பதில் வீடு என்பதற்குப் புறத்தே வந்தமையால் புறச்சுட்டு.

(136) உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தை உதாரணந் தந்து விளக்குக.

**உயிர்த் தொடர் குற்றியலுகரம் :-**

இரண்டெழுத்தில் வராது. மூன்று எழுத்துக்களுக்கு மேற்பட்டு சொல்லின் ஈற்றிலுள்ள இரண்டாவது எழுத்து உயிா

நெடிலையோ குறிலையோ பெற்ற உயிர்மெய்யாகவும், ஈற்றெழுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரமாகவும் வருதல்.

உதாரணம் :- வரகு, பலாசு, இறும்பூது.

(137) ஒற்றளபெடை என்பது யாது? உதாரணந் தருக.

செய்யுளில் ஓசைகுறையுமிடத்துத் தனிக்குறிலை அல்லது குறிலிணை அடுத்து வரும் ஒற்றையெழுத்து தன்மாத்திரையின் நீண்டு ஒலித்து அளபெடுக்கும். அதற்கு அறிகுறியாக அதே எழுத்தே அடுத்து வரும்.

உதாரணம் :- எங்ஙுகிறைவனுளன், இலங்ஙுகுவெண்பிறை

(138) போலி என்பது யாது? உதாரணந் தந்து விளக்குக.

ஓர் எழுத்துக்குப் பதில் மற்றோர் எழுத்துச் சொல்லின் தொடக்கத்திலோ இடையிலோ இறுதியிலோ அமைந்து வருதல்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் :- | பசல் | - பைசல் | (மொழி முதற்போலி) |
| | ஐந்நூறு | - ஐஞ்நூறு | (மொழி இடைப்போலி) |
| | பந்தல் | - பந்தர் | (மொழியிறுதிப் போலி) |

(139) சாரியை என்பது யாது? விளக்குக ?

பெயர், வினைப் பகுபதங்களின் ஓர் உறுப்பாகும். சொல்லின் ஒலிப்பினை எளிதுபடுத்திப் பொருட்பேற்றுக்கு உதவும்.

உதாரணம் :- நடந்தனன் (நட + த் + த் + அன்+ அன்)
நடந்தான் என்ற பொருளை தருகிறது.

பலவற்றை (பல + அற்று + ஐ) அற்றுச் சாரியை ஒலிப்பினை எளிதாக்கியுள்ளது.

புளியங்காய் (புளி + அம் + காய்) புளியங்காய் என்பது புளியான எல்லாக் காய்களையும் குறிக்கும்.

(140) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக.

(அ) மணி + அழகு (ஆ) விளா + காய்)

(அ) மணி + அழகு = மணியழகு

இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிர் ஈற்றின் முன்னும் உயிர் முதல்மொழி வந்தால் இடையில் யகரம் உடன் படு மெய்யாக வரும் என்னும் விதிப்படி
மணி + ய் + அழகு = மணியழகு எனப் புணர்ந்தது.

(ஆ) விளா + காய் = விளாங்காய்

உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின், இனவெழுத்து மிகும் என்ற விதிப்படி புணர்ந்தது.

(141) திரிசொல்லாவது யாது? உதாரணந் தந்து விளக்குக.

அரிதாகக் கற்றோர் அறியும் பொருளனவாய் இயற்சொல்லின் வேறுபட்ட சொல் திரிசொல். இது ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் பெயர், வினை, இடை, உரி, ஆகிய நான்கு வகைச் சொல்லிலும் வரும்.

உதாரணம் :-கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல். கிள்ளை, சுகம், தத்தை முதலியன. வாரணம் என்பது யானை, கோழி சங்கு முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல் எனப்படும்.

(142) தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுள்ள வேறுபாட்டை உதாரணத்துடன் விளக்குக.

தொழிற்பெயர் :- தொழிலால் (வினையடியால்) வரும் பெயர்ப்பகுபதம்.

தொழிற்பெயர் விகுதி ஒன்றையாவது பெற்று வேற்றுமை ஏற்று வரும்.

பால், காலம், காட்டாது.

உதாரணம் :- நடத்தல் (நட), வருதல்.

**வினையாலணையும் பெயர்** :- வினை அடியாகத் தோன்றிப் பாலைத் தெளிவாகக் காட்டும். காலம் குறிப்பாகவேனும் வந்து வேற்றுமையுருபு ஏற்கும்.

உதாரணம்:- வந்தானைக் கண்டேன். பெரியானைப் பார்த்தேன்.

இரண்டிற்குமுள்ள வேறுபாடு :

(1) தொழிற்பெயர் பால் காட்டும் உருபு ஏற்காது. வினையாலணையும் பெயர் பால்காட்டும் விகுதி ஏற்கும்.

(2) தொழிற்பெயர்த் தன்மை, முன்னிலை, படர்க்கை, என்னும் மூவிட வேறுபாட்டைக் காட்டா. வினையாலணையும் பெயர் காட்டும்.

உதாரணம் :- நடந்தேனை (தன்மை), நடந்தாயை (முன்னிலை),

நடந்தானை (படர்க்கை)

தொழிற்பெயர் நடத்தல் எனவே வரும்.

(143) காலவாகு பெயரையும் தொழிலாகு பெயரையும் உதாரணந் தந்து விளக்குக.

**காலவாகு பெயர்** :- உதாரணம் :- கார் அறுத்தது.

இங்கே கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்தில் விளையும் நெற் பயிருக்காதலால் காலவாகுபெயர்.

**தொழிலாகு பெயர்** :- உதாரணம் :- பொரியல் உண்டான்.

இங்கே பொரியல் என்னும் தொழிற் பெயர் அதனைப் பொருந்திய உணவுக்காதலால் தொழிலாகுபெயர்.

(144) மூன்றாம் வேற்றுமைப் பொருள்கள் யாவை? விளக்குக.

மூன்றாம் வேற்றுமைப் பொருள்கள் :- கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி, ஒப்பு,

| | | |
|---|---|---|
| உதாரணம் :- | கருவி | :- வாளால் வெட்டினான். |
| | கருத்தா | :- அரசனால் ஆகிய கோயில். |
| | உடனிகழ்ச்சி | :- மகனோடு தந்தை வந்தான். |
| | ஒப்பு | :- மதியொடு ஒக்கும் முகம். |

(145) தற்கிழமை, பிறிதின் கிழமை என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.

கிழமை என்பது உடைமை அல்லது உரிமையாகும். தன்னிலிருந்து வேறுபடுத்த முடியாதது தற்கிழமை. வேறுபடுத்தக் கூடியது பிறிதின் கிழமை.

| | | |
|---|---|---|
| உதாரணம்:- | கந்தனது கை | - உறுப்புத் தற்கிழமை. |
| | கந்தனது கருமை | - பண்புத் தற்கிழமை. |
| | நெல்லது குப்பை | - ஒன்றன் கூட்டத் தற்கிழமை |
| | முருகனது வேல் | - பொருட் பிறிதின் கிழமை |
| | முருகனது மாலை | - இடப் பிறிதின் கிழமை |
| | முருகனது திருநாள் | - காலம் பிறிதின் கிழமை |

(146) "ஏ" கார இடைச்சொல் உணர்த்தும் நான்கு பொருள்களை உதாரணந் தந்து விளக்குக.

"ஏ" கார இடைச்சொல் உணர்த்தும் நான்கு பொருள்கள்.

**பிரிநிலை** உ-ம் :- அவருள் இவனே கள்வன்.

இங்கே ஒரு கூட்டத்தாருள் ஒருவனை பிரித்துக்காட்டுதலால் பிரிநிலை ஏகாரம்

**வினா** உ-ம் :- நீயே கொண்டாய்?

இங்கே நீயா கொண்டாய் என்னும் பொருளைத் தருதலால் வினா.

**தேற்றம்** உ-ம் :- உண்டே கடவுள்.

இங்கே கடவுள் உண்டு என்பதற்கு ஐயமில்லை என்னுந் தெளிவுப் பொருளைத் தருதலால் தேற்றம்.

**எண்** உ-ம் :- நிலமே, நீரே, தீயே.

இங்கே நிலமும் நீரும் தீயும் எனப் பொருள் பட எண்ணி நிற்றலால் எண்.

(147) வியங்கோள் வினைமுற்று எவ்வாறு அமையும்? விளக்குக.

வியங்கோள் வினைமுற்று அமையும் முறை :-

இருதிணை, ஐம்பால், மூவிடத்திற்கும் பொதுவாய் எதிர்காலத்தை எப்பொழுதும் காட்டும் க, இய, இயர், அல் விகுதிகளில் ஒன்றைப் பெற்று வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல், என்ற நான்கில் ஒரு பொருளைத் தந்து வரும் ஏவற்சொல்லாகும்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் :- | க | - வாழ்க | - |
| | இய | - வாழிய | - யான், யாங்கள் |
| | இயர் | - வாழியர் | - நீ, நீங்கள் |
| | அ | - வர | - அவன், அவள், அவர் |
| | அல் | - எனல் | - அது, அவை |

வாழிய, வாழி என ஈற்றுயிர் மெய்கெட்டு வரும்.

(148) ஒரு குணந்தழுவிய உரிச்சொற்கள் நான்கு தருக.

சால, உறு, தவ, நனி, (அல்லது, கூர், கழி)

(149) ஓடு மீன் ஓட - இத் தொடரிலுள்ள தொகையின் பெயரைக் கூறி விளக்கந் தருக.

ஓடும் மீன் - வினைத்தொகை. ஓடிய மீன், ஓடுகின்ற மீன், ஓடும் மீன் என்பன முறையே முக்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சங்களாகும்.

இவற்றில் வரும் காலங்காட்டும் இடைநிலைகள் தொக்கு நின்று ஓடுமீன் என வந்தமையால் இது வினைத்தொகை யாகும். (கடித்தநாய், கடிக்கின்ற நாய், கடிக்கும் நாய், கடிநாய் என வந்தது போன்ற வினைத்தொகை இது)

(150) மாத்திரை என்றால் என்ன? தமிழ் எழுத்துக்களின் மாத்திரை அளவுகளைத் தருக.

மாத்திரையாவது இயல்பாக உண்டாகும் கண்ணிமைப் பொழுது அல்லது கை நொடிப் பொழுதாகும்.

உயிர் குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று. இதே போல உயிர் மெய் குற்றெழுத்துக்கும் மாத்திரை ஒன்றே.

உயிர் நெட்டெழுத்துக் மாத்திரை இரண்டு. இதே போல உயிர் மெய் நெட்டெழுத்துக்கும் மாத்திரை இரண்டே.

மெய்யெழுத்துக்குத் தனித்தனி மாத்திரை அரை. ஆய்தவெழுத்துக்கும் மாத்திரை அரை.

குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகார, ஔகாரக் குறுக்கம் என்பவற்றிற்குத் தனித்தனி அரை மாத்திரை. மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம், கால்மாத்திரை. உயிரள பெடைக்கு மூன்று மாத்திரை, ஒற்றளபெடைக்கு ஒரு மாத்திரை.

A. V. Ariyanayagam J.P.,U.M.
Chairman
Delft Pradesa Sabai

(151) உடன்படு மெய் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.

இரண்டு உயிர் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து ஒலிக்க மாட்டா. அவை ஒன்று சேர இடையிலொரு மெய் எழுத்து வரவேண்டும். வகரம், யகரம் ஆகிய இரு மெய்யெழு த்துக்களே உடம்படு மெய்யாக வரும். பிற மெய்கள் வரமாட்டா.

பின்வருமாறு மூன்று வகையாக உடம்படு மெய் வரும்.

1. இ, ஈ, ஐ முன்னே யகர உடம்படு மெய் வரும்.

உ-ம் : மணி + அழகு = மணியழகு

2. இ, ஈ, ஐ தவிர்ந்த ஏனையவற்றின் முன்னே வகர உடன்படு மெய் வரும்.

உ-ம் : பூ + அழகு = பூவழகு

3. ஏகாரத்தின் முன்னே இரண்டு மெய்களும் வரும்.

உ-ம் : அவனே + அழகன் = அவனேயழகன்

சே + உழுதது = சேவுழுதது

கோ + இல் = கோவில்

இது கோயில் எனவும் வரும்

(152) மேல்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக.

(அ) கொக்கு + அழகு (ஆ) முள் + தீது

அ. கொக்கு + அழகு = கொக்கழகு, நிலைமொழி கொக்கு, குற்றியலுகரம்.

வருமொழி அழகு. இதன் முதல் எழுத்து உயிர். உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடி, கொக்க் அழகு என வர அதன் பின் உடல் மேல் உயிர் ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி கொக்கழகு என்றாகியது.

ஆ. முள் + தீது = முட்டீது, நிலைமொழி முள், இதில் ஈறு ளகரம். எனவே ளகர வீற்றில் முன்வரும் வல்லினம் டகரமாகத் திரியும் என்றபடி தீது என்றாகி, றகரத்தின் முன்வரும் தகரம் டகரமாகும் என்ற விதிப்படி முட்டீது என்றாகியது. மேலும் தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த ளகரம் அல்வழியில் டகரமாகத் திரிதலின்றி ஆய்தமாக வும் திரியும் என்றபடி,

முள் + தீது = மு∴டீது என்றும் புணரும்.

(153) விரவுத் திணையாவது யாது? விளக்குக.

விரவுத் திணையாவது உயர்திணை, அ∴றிணை ஆகிய இரண்டிற்கும் பொது. இது திணைப்பொது எனப்படும்.

உ-ம் :-

| | | |
|---|---|---|
| 1. முதற்பெயர் நான்கு | : | சாத்தன், சாத்தி, கோதை, கோதைகள். |
| 2. சினைப்பெயர் இரண்டு | : | முடவன், முடத்தி. |
| 3. சினைமுதற்பெயர் இரண்டு | : | முடக்கொற்றன், முடக்கொற்றி முதலியன. |
| 4. முறைப்பெயர் இரண்டு | : | தாய். தந்தை |
| 5. தன்மைப் பெயர் | : | நான், யான் முதலியன |
| 6. முன்னிலைப் பெயர் | : | நீ , நீங்கள், முதலியன. |
| 7. எல்லாம் | : | உ-ம் :- அவர் எல்லாம் வந்தனர், அவை எல்லாம் வந்தன. |
| 8. தான் தாம் | : | உ-ம் :- அவன் தான் வந்தான். அது தான் வந்தது. |
| 9. சூரியன் | : | உ-ம் :- சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது. |

(154) கூட்டெழுத்துக்கள் எவை ?

ஐ, ஔ இரண்டுங் கூட்டெழுத்துகளாகும்.

அ + ய் + = ஐ

அ + வ் + உ = ஔ

(155) வேற்றுமை மயக்கம் என்றால் என்ன? உதாரணந் தந்து விளக்குக.

வேற்றுமை மயக்கம் என்பது ஒரு வேற்றுமைக்குரிய உருபு, நிற்றற்குரிய இடத்தே மற்றொரு வேற்றுமையுருபு வருதல். அது வேற்றுமை உருபு மயக்கம் எனப்படும்.

உ-ம் :- ஈசற்கு யான் வைத்த அன்பு என்பது ஈசனில் அல்லது ஈசனின் கண் யான் வைத்த அன்பு என்னும் என 7 ம் வேற்றுமை நிற்றற்குரிய இடத்தே நான்காம் வேற்றுமைக்குரிய "கு" உருபு வந்தது.

ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றமையுருபோடுந் தகுதியாக வருதல் பொருள் மயக்கமாகும்.

உ-ம் :- கந்தனோடு சேர்ந்தான். இது கந்தனைச் சேர்ந்தான் என இரண்டாம் வேற்றுமைச் செயப்படுபொருளாக வர வேண்டியது, ஒடு உருபு பெற்று மூன்றாம் வேற்றுமை பொருளாக வந்துள்ளது.

(156) மூன்று காலத்தையும் உணர்த்தக்கூடிய வினையெச்சம் யாது? விளக்குக.

மூன்று காலத்தையும் உணர்த்தக் கூடிய வினையெச்சம் செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகும்.

1. இது காரணப்பொருளில் வரும் போது இறந்த காலத்தைக் காட்டும்.

   உ-ம் :- மழை, <u>பெய்ய</u> நெல் விளைந்தது.

2. உடனிகழ்ச்சிப்பொருளில் வரும் போது நிகழ்காலம் காட்டும்.

உ-ம் :- சூரியன், <u>உதிக்கக்</u> கந்தன் வந்தான்.

3. காரியப்பொருளில் வரும் போது எதிர்காலம் காட்டும்.

உ-ம் :- நெல் <u>விளைய</u> மழை பெய்தது.

(157) இல்லை, உண்டு இவற்றின் இலக்கணத்தை விளக்குக.

இல்லை உண்டு இவற்றின் இலக்கண விளக்கம் :

இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகி வரும் குறிப்புவினை முற்றுச் சொற்கள் வேறு, இல்லை, உண்டு, என்னும் மூன்றுமாம். யார் என்னும் வினாவினைக்குறிப்பு முற்றும் இவ்வாறு வருதல் உண்டு.

| | படர்க்கை | தன்மை | முன்னிலை | |
|---|---|---|---|---|
| உ-ம்: | அவன் | | | |
| | அவள் | யான் | நீ | |
| | அவர் | நாம் | நீர் | |
| | | | | இல்லை |
| | அது | நான் | | உண்டு |
| | அவை | நாங்கள் | நீங்கள் | |

(158) அடுக்குத் தொடர் என்றால் என்ன? விளக்குக.

அடுக்குத் தொடர் என்பது ஒரு பெயர்ச்சொல்லே அடுத்து அடுத்து வரும் தொகாநிலைத் தொடராகும். தமிழில் வரும் ஒன்பது வகையான தொகாநிலைத் தொடர்கள் உள. அவற்றிலொன்று இது:

உ-ம் : கள்வன், கள்வன். பாம்பு, பாம்பு

(159) சினையாகு பெயர், குணவாகு பெயர் என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.

**சினையாகு பெயர் :-**

ஒரு பொருளின் உறுப்பே சினை, சினையின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு (முதலுக்கு) ஆகிவருவது சினையாகு பெயராகும்.

உ-ம்:- வெற்றிலை நட்டான், வெற்றிலை என்ற சினைப்பெயர் கொடியாகிய முதலுக்கு ஆகியதால் சினையாகுபெயர்

**குணவாகு பெயர் :-**

இது பண்பாகு பெயர் எனவும் கூறப்படும். ஒரு பொருளின் குணம் அல்லது பண்பு, அதனுடைய பொருளுக்கு ஆகி வருவது குணவாகு பெயராகும்.

உ-ம் :-வெள்ளை உடுத்தான், இங்கே வெள்ளை என்ற குணப்பெயர் வெள்ளை நிறத்தையுடைய உடைக்கு (பொருளுக்கு) ஆகியதால் குணவாகுபெயர்.

(160) இடப்பெயருக்கும் இடவாகுபெயருக்கும் உள்ள வேறுபாட்டை உதாரணந் தந்து விளக்குக.

இடப்பெயருக்கும் இடவாகுபெயருக்கும் உள்ள வேறுபாடு:-

திருநெல்வேலி என்பது இடப்பெயர். திருநெல்வேலி விளையாட்டில் வென்றது என்பது இடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய விளையாட்டு வீரர்களுக்காகி வந்தமையால் இடவாகு பெயராயிற்று,

ஊர் சிரித்தது என்பதில் ஊராகிய அ.்.றிணைப் பெயர் சிரிக்கும் தன்மையுடையதன்று என்பது யாவருக்கும் புலனாகும். எனவே இது ஊரை எவ்வாற்றாலும் குறிக்காது. ஊர்மக்களையே குறிக்கும். இவ்வாறும் இடவாகு பெயர் வரும்.

(161) வேற்றுமை ஏற்கும் இரு வினை வடிவங்கள் யாவை? விளக்குக.

வேற்றுமை ஏற்கும் இருவினை வடிவங்கள் :-

1. தொழிற்பெயர். 1998
2. வினையாலணையும் பெயர்

வினைச்சொல் வேற்றுமை ஏற்காது. ஆயினும் வினைவடிவம் பெயர்த்தன்மைப் பட்டுப், பெயராகி வேற்றுமை ஏற்கும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும் என்பதில் ஒன்று தொழிற்பெயர். நட என்னும் வினை அடி தொழிற்பெயர் விகுதி பெற்று நடத்தல், நடப்பனவாகி வேற்றுமை ஏற்கும் பெயராக வரும். நடந்தன என வரின் இது காலமும் காட்டும் தொழிற்பெயரை வினைப்பெயர் என்பர்.

நடந்தான் என்பது இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று. இது நடந்தானை நான் கண்டேன் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபேற்றுப் பெயராக வருகின்றது. இவ்வாறு வருவன வினையாலணையும் பெயர்களாகிப் பெயர்ச் சொற்கள் எனக் கொள்ளப்படுகின்றன.

(162) பிற வினைமுற்று எவ்வாறு அமையும்? விளக்குக.

பிறவினை முற்று அமையும் முறை மூன்று வகையாகும்.

1. தெரிநிலை வினைப்பகுதிகள், வி, பி, கு,சு, டு, து, பு, று என்னும் எட்டுப்பிறவினைப் விகுதிகளைப் பெற்று பிறவினை முற்றுக்களாகும்.

   உ-ம் :- செய், செய்வி, செய்வித்தான்
   நட, நடப்பி, நடப்பித்தான்.

2. விகாரப்பட்டும் வரும்.

   உ-ம் :- திருந்து, திருத்து, திருத்தினான்.
   (மெல்லினம் வல்லினமானது)
   ஆடு, ஆட்டு, ஆட்டுவித்தான் (மெய் இரட்டி வந்தது.)

3. விகாரப்பட்டு விகுதி பெற்றும் வரும்.

உ-ம் :- திருத்து, திருத்துவி, திருத்துவித்தான்.

4. தன்வினை, பிறவினை இரண்டுக்கும் பொதுவினை

உ-ம் :- வெளுத்தான்.

(163) "உம்" இடைச்சொல் உணர்த்தும் நான்கு பொருள்களை உதாரணந் தந்து விளக்குக.

"உம்" இடைச்சொல் உணர்த்தும் நான்கு பொருள்கள் :

**எ்திர் மறைப்பொருள்**:- உ-ம்:- களவு செய்யினும் பொய் கூறாதே.

இது களவு செய்யலாகாது என்னும் பொருளைத் தருவதால் எதிர்மறை.

**ஐயப்பொருள்** :- உ-ம்:-அவன் வென்றாலும் வெல்வான்.

இது ஐயத்தையுணர்த்தலால் ஐயம்.

**எச்சப் பொருள்** :- உ-ம்:- ஆசிரியரும் வந்தார்.

இது மாணவர்களும் வந்தனர் என்னும் பொருளைத் தருவதால் எச்சம்.

**முற்றுப் பொருள்** :- உ-ம்:- மூவேந்தரும் வந்தனர்.

சேரசோழபாண்டியர் மூவரையும் முற்றும் குறித்தலால் முற்று.

உயர்வுச் சிறப்பு, இழிவுச் சிறப்பு, முதலிய வேறு பலவாகவும் வரும்.

(164) மிகுதிப் பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் இரண்டினைத் தந்து விளக்குக.

மிகுதிப்பொருளை உணர்த்தும் உரிச்சொல் இரண்டு :- சால, உறு,

தவ, நனி, கூர், கழி, என்பன மிகுதி என்னும் ஒரு குணம் தழுவிய உரிச்சொற்களாம்.

உதாரணம் :- சீர்சால் முனிவன் - சீர் மிகுந்த முனிவன் எனச் சீர்மிகுதியைச் சால் என்னும் உரிச்சொல் உணர்த்துகின்றது.

உறுபுனல் -மிக்கபுனல் என்று நீர் மிகுதியை உணர்த்துகின்றது.

(165) சுட்டெழுத்துக்கள் யாவை?

அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் சுட்டுப் பொருளில் வந்தால் சுட்டெழுத்துக்கள்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) : | அவன் | இவன் | உது |
| | அவள் | இவள் | |
| | அவர் | இவர் | |
| | அது | இது | |
| | அம்மனிதன் | இம்மனிதன் | |

A. T. Ariyaratnam J.P., U.M.
Chairman
Galle Pradesa Sabai

அ,இ,உ என்ற மூன்றும் சுட்டெழுமத்துகளாகும்.

(166) அகச்சுட்டு என்றால் என்ன?

அ, இ, என்ற சுட்டெழுத்துக்கள் ஒரு சொல்லின் உள்ளாகவே நின்று சுட்டுப்பொருளைக் காட்டி வந்தால் அகச்சுட்டு எனப்படும்.

(அகம் = உள்)

(உ-ம்) : { அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை }

(167) புறச்சுட்டு என்றால் என்ன ?

அ. இ, என்ற சுட்டெழுத்துக்கள் ஒரு சொல்லுக்கு வெளியே நின்று சுட்டுப் பொருளைக் காட்டி வந்தால் புறச்சுட்டு எனப்படும்.

(உ-ம்) : அம்மனிதன், அப்பெண், அப்பொருள்,
இம்மனிதன், இப்பெண், இப்பொருள்,

(குறிப்பு : சில சமயங்களில் அ, இ என்ற சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த என முறையே திரிந்தும் வரும்.

(உ-ம்) : (1) அவன்

இதிலுள்ள "அ" என்ற சுட்டெழுத்தைத் தனியே வைத்தபின் மீதியுள்ள பாகம் "அன்" என்பது ஒரு முழுச்சொல் அல்ல. எனவே இச்சொல்லிலுள்ள சுட்டெழுத்து அகச்சுட்டு.

(உ-ம்) : (2) இம்மரம்

இதிலுள்ள "இ" என்ற சுட்டெழுத்தைத் தனியே வைத்தபின் மீதியுள்ள பாகம் "மரம்" என்பது. இது ஒரு முழுச்சொல் எனவே, இச்சொல்லிலுள்ள சுட்டெழுத்து புறச்சுட்டு

(குறிப்பு : "அ", "இ" என்ற எழுத்துக்களைத் தவிர "உ" என்பது சுட்டெழுத்து ஆகும். அது இப்பொருள்களுக்கு இடையே உள்ள பொருளையும் மேலே உள்ள பொருளையும் குறிக்கும். இது பெரும்பாலும் செய்யுளில்தான் வரும்.)

(168) வினா எழுத்துக்கள் யாவை?

ஆ, எ, ஏ, ஓ, யா என்ற ஐந்து எழுத்துக்களும் கேள்வி குறித்து வந்தால் வினா எழுத்துக்கள் ஆகும்.

(உ-ம்) :

| | |
|---|---|
| எவன்? | எம்மனிதன் |
| யாவன்? | யாங்ஙனம் |
| அவனா? | செழியனா? |
| அவனோ? | செழியனோ? |
| ஏது? | நன்றன்றே? (நல்லதல்லவா?) |

(169) அகவினா என்றால் என்ன?

வினா எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கு உள்ளேயே நின்று வினாப் பொருளைக் காட்டி வந்தால் அகவினா எனப்படும்.

(உ-ம்) : எவன்? அவனா?
ஏது?
யாவன்? அவனோ?

(170) புறவினா என்றால் என்ன?

வினா எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கு வெளியே நின்று வினாப் பொருளைக் காட்டி வந்தால் புறவினா எனப்படும்.

(உ-ம்) : எம்மனிதன்? செழியனா?
யாங்ஙனம்? செழியனோ?

(குறிப்பு : வினாப்பொருளைத் தரும் சொல்லில் வினா எழுத்தைத் தனியே நிறுத்தி மீதியுள்ள பாகம் ஒரு முழுச்சொல்லானால் அது புறவினா, மீதியுள்ள பாகம் ஒரு முழுச்சொல் அல்ல என்றால் அது அகவினா.)

(171) மெய்யெழுத்துக்களுள் ஒன்றிற்கொன்று இனமாகும் எழுத்துக்கள் யாவை?

மெய்யெழுத்துக்களுள் ஆறு வல்லின மெய்களுக்கு ஆறு மெல்லின மெய்களும் முறையே இனம் ஆகும்.

அவை முறையே :

| | | |
|---|---|---|
| க் | - | ங் |
| ச் | - | ஞ் |
| ட் | - | ண் |
| த் | - | ந் |
| ப் | - | ம் |
| ற் | - | ன் |

இடையின மெய்கள் எல்லாம் ஒரே இனமாகும்

(குறிப்பு: இங்கு கூறியவை யாவும் உயிர்மெய்யெழுத்துக்களுக்கு பொருந்தும்.)

(172) பால்பகா அ∴றிணைப் பெயர்கள் என்றால் என்ன?

இன்ன பால் என்று பிரித்துச் சொல்லமுடியாத பெயர்ச் சொற்கள் பால்பகா அ∴றிணைப் பெயர்கள் எனப்படும்.

(குறிப்பு : ஒன்றன் பாலைக் காட்டும் "து" விகுதியையும் பலவின் பாலைக்காட்டுகின்ற "வை, அ, கள்" என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அ∴றிணைப் பெயர்கள் பால்பகா அ∴றிணைப் பெயர்கள் ஆவன, இவை ஒன்றன் பாலுக்கும் பலவின் பாலுக்கும் பொதுவாய் வரும்.)

(உ-ம்) : <u>கண்</u> சிவந்தது. (ஒன்றன்பால்)
<u>கண்</u> சிவந்தன. (பலவின்பால்)

(173) முதல் எழுத்துக்கள் யாவை?

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆக மொத்தம் முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்துக்கள் ஆகும்.

(174) சார்பெழுத்துக்கள் யாவை?

உயிர்மெய்யெழுத்துக்கள், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துக்கள் ஆவன.

(175) குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

குற்றியலுகரம் ஆறுவகைப்படும். அவை :

(1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

(2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

(3) உயிர்தொடர்க் குற்றியலுகரம்.

(4) வன்றொடர்க் குற்றியலுகரம்.

(5) மென்றொடர்க் குற்றியலுகரம்.

(6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

குற்றியலுகரத்தைக் கண்டுபிடிக்கும் முறை

ஒரு சொல்லின் இறுதியில் கு, சு,டு,து, பு, று என்ற ஆறு எழுத்துக்களில் ஒன்று இருக்கவேண்டும். அந்த ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து தனி நெட்டெழுத்தாக இருந்தால் நெடில் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்) : பாகு, காசு, நாடு, சூது, பாபு, தாறு

ஈற்றெழுத்துக்கு முன்னே உள்ள எழுத்து ஆய்த எழுத்து ஆயின் அது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்) : எ∴கு, க∴சு, (ஒரு சிறு எடை), அ∴து

(176) முற்றியலுகரம் என்றால் என்ன?

குற்றியலுகரம் அல்லாதன எல்லாம் முற்றியலுகரம். அதாவது தனியாக நிற்கும். உகரம், தனிக்குற்றெழுத்தைச் சார்ந்து வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம், இடையின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம், மொழிக்கு முதலில் வரும் உகரம் ஆகியவை முற்றியலுகரங்களாவன.

(உ-ம்): உ, கு,து, கடுகழிவு, விம்மு, உருவம், குடதிசை, துவரை

மெல்லின மெய்யின் மேலும் இடையின மெய்யின் மேலும் ஏறிநிற்கும் உகரமும் தனிக் குற்றெழுத்தால் தொடரப்பட்ட வல்லின மெய்யின் மேல் ஏறிநிற்கும் உகரமும் முற்றியலுகரங்களாகும்.

உ+ம் : பசு, கதவு, வரவு, வேணு, கொசு, திரு, மறு.

(177) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?

பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் உயிரோடு இணைந்த க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்ற பத்து மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்): அன்பு, ஆறு, இயல்பு, ஈகை, உண்மை, ஊக்கம், எழுச்சி, ஏற்றம், ஐந்து,உப்புரவு, ஓதுதல், ஔவை, கருத்து, காலம், கிளை, கீரி, குரல், கூடை, கெண்டை, கேடு, கையறு, கொடை, கோவில், கௌவை, (பொறாமை), சங்கு, சாறு, சினம், சீறு, சுனை, சூழ்ச்சி, செம்மல், சேய்மை, சைகை, சொக்கு, சோழன், சௌரியம், தமிழ், தாமரை, தினவு, தீவு, துணை, தூண், தெளிவு, தேற்றம், தையல், தொல்லை, தோற்றம், தௌவை (மூதேவி), நகை, நாகம், நிரை, நீலம், நுரை, நூல், நெற்று, நைதல், நொச்சி, நோன்பு, நௌவி, (மான்), பண்பு, பாம்பு, பிரிவு, பீடை, புகழ், பூதம், பெரிது, பேதைமை, பையன், பொதுமை, போது, பௌவம் (கடல்), மணம், மாதர், மிகுதி, மீட்சி, முதலை, மூத்தவன், மென்மை, மேன்மை, மையல், மொக்கு, மோர், மௌலி (கீரிடம்), வளமை, வானம், விரல், வீக்கம், வெளி, வேலி, வையம், வௌவு (கவர்ந்துகொள்), யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம், ஞமலி (நாய்), ஞாயிறு, ஞெகிழி (நெருப்பு), ஞொள்கல் (இளைத்தல்), ஙனம் (இடத்தையும் தன்மையையும் உணர்த்தும்)

(178) உடன்பாட்டு வினையாவது யாது?

தொழில் நடத்தலை உணர்த்துவது உடன்பாட்டு வினை ஆகும்.

(உ-ம்) : மழை பெய்தது, நாளை வருவான், இன்றே செய்க.

(179) எதிர்மறை வினையாவது யாது?

தொழில் நடவாமையை உணர்த்துவது எதிர்மறை வினை ஆகும்.

(உ-ம்) : மழை பெய்யவில்லை, நாளை வாரான், கெடுதி செய்யற்க.

(180) பகுபத உறுப்புக்கள் யாவை?

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம், என்னும், ஆறும், பகுபத உறுப்புக்கள் ஆவன.

(உ-ம்) :

| சொல் | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| உண்டான் | உண் | ....... | ....... | ட் | ....... | ஆன் |
| உண்டனன் | உண் | ....... | ....... | ட் | அன் | அன் |
| பிடித்தனன் | பிடி | த் | ....... | த் | அன் | அன் |
| நடந்தனன் | நட | த் | சந்தியில் வந்த "த்" "ந்" ஆயிற்று | த் | அன் | அன் |

(181) வினைச் சொற்களில் காலம் காட்டும் உறுப்பு யாது?

வினைச் சொற்களில் இடைநிலைகள் காலங்காட்டும் உறுப்புகள் ஆகும். சில சொற்களில் பகுதி இரட்டித்தும் சிலசொற்களில் விகுதியும் காலங்காட்டுவன.

உண்டான் (ட் - இடைநிலை)

நட்டான் (நடு - பகுதி இரட்டித்தல்)

செய்து (து - விகுதி)

(182) இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

த், ட், ற், இன் என்ற நான்கும் இறந்தகாலம் காட்டும் இடைநிலைகள் ஆவன.

(உ-ம்) :

| | | | |
|---|---|---|---|
| கொடுத்தான் | - | "த்" | இடைநிலை |
| உண்டான் | - | "ட்" | இடைநிலை |
| சென்றான் | - | "ற்" | இடைநிலை |
| உறங்கினான் | - | "இன்" | இடைநிலை- |

(183) பகுதி இரட்டித்துக் காலம் காட்டுதலுக்கு எடுத்துக் காட்டுக்கள் தருக?

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுச் சில பகுதிகள் தம் ஒற்று இரட்டி இறந்த காலம் காட்டுவன.

(உ-ம்) :

நகு - நக்கான்; தொடு - தொட்டான்; உறு - உற்றான்;
புகு - புக்கான்; போடு - போட்டான்; பெறு - பெற்றான்;
தொகு - தொக்கான்; விடு - விட்டான்;

(184) விகுதிகள் காலம் காட்டுதலை விளக்குக.

சில வினைச்சொற்களில் விகுதி காலம் காட்டும்.

(உ-ம்) :

சேறும் - "றும்" விகுதி எதிர்காலம் காட்டியது

வருதும் - "தும்" விகுதி எதிர்காலம் காட்டியது.

உண்மின் - "மின்" என்னும் ஏவல் பகுதி எதிர்காலம் காட்டியது

வாழ்க - "க" என்னும் வியங்கோள் விகுதி எதிர் காலம் காட்டியது.

(185) விகாரப் புணர்ச்சியாவது யாது?

இரு சொற்கள் இணையும் போது நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் சில மாற்றங்கள் ஏற்படும். அம்மாற்றங்கள்:

(1) புதிதாக ஓர் எழுத்து அல்லது சாரியை தோன்றுதல்.

(2) ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாக மாறுதல்.

(3) உள்ள எழுத்து மறைதல் என்பன.

அவற்றை முறையே தோன்றல்விகாரம், திரிதல்விகாரம், கெடுதல்விகாரம் என்பர்.

(உ-ம்) :

மா + கனி = மாங்கனி (தோன்றல் விகாரம்)
எள் + நெய் = எண்ணெய் (திரிதல் விகாரம்)
மரம் + வேர் = மரவேர் (கெடுதல் விகாரம்)

(186) செய்யுள் விகாரங்கள் எத்தனை? விளக்குக.

செய்யுள் விகாரங்கள் ஆறு. அவை:

(1) வலித்தல் விகாரம்.

(2) மெலித்தல் விகாரம்.

(3) நீட்டல் விகாரம்.

(4) குறுக்கல் விகாரம்.

(5) விரித்தல் விகாரம்.

(6) தொகுத்தல் விகாரம் என்பன.

A. K. Ariyanayagam J.P., U.M.
Chairman
Delft Pradesa Sabai

[குறிப்பு :

வலித்தல் - மெல்லெழுத்து வல்லெழுத்தாக மாறுதல்
மெலித்தல் - வல்லெலழுத்து மெல்லெழுத்தாக மாறுதல்.
நீட்டல் - குற்றெழுத்து நெட்டெழுத்தாக மாறுதல்.
குறுக்கல் - நெட்டெழுத்து குற்றெழுத்தாக மாறுதல்.
விரித்தல் - இல்லாத எழுத்தை வருவித்தல்.
தொகுத்தல் - உள்ள எழுத்தை நீக்குதல்.]

(உ-ம்) :

குருத்தாட் பூதம் - ("குருந்தாட் பூதம்" என்பது "குறுந்தாள்" என்று ஆயிற்று. அதனால் வலித்தல் விகாரம்)

தண்டை - ("தட்டை" என்பது "தண்டை" என்று ஆயிற்று. அதனால் மெலித்தல் விகாரம்)

நீழல் - ("நிழல்" என்பது "நீழல்" என்று ஆயிற்று. அதனால் நீட்டல் விகாரம்)

தியேன் - ("தீயேன்" என்பது "தியேன்" என்று ஆயிற்று. அதனால் குறுக்கல் விகாரம்)

விளையும்மே - ("விளையுமே" என்பது "விளையும்மே" என்று ஆயிற்று. அதனால் விரித்தல் விகாரம்)

பெறுகென - ("பெறுகவென" என்பது "பெறுகென" என்று ஆயிற்று. அதனால் தொகுத்தல் விகாரம்)

குறிப்பு : மேற்கூறிய விகாரங்கள் இல்லாமல் இயல்பாக இணைவது இயல்புப் புணர்ச்சியாகும்.

(187) இடைச்சொற்களின் வகைகளை விளக்கி எழுதுக.

(1) வேற்றுமை உருபுகள்
(2) பால் காட்டும் விகுதிகள்
(3) காலம் காட்டும் இடைநிலைகள்
(4) சாரியைகள்
(5) உவமை உருபுகள்
(6) சுட்டெழுத்துக்கள்
(7) வினா எழுத்துக்கள்
(8) செய்யுள் அசைகள் என இடைச் சொற்கள் எண் வகைப் படும்.

(1) **வேற்றுமை உருபுகள்** : ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலியன.

(2) **பால் காட்டும் விகுதிகள்** : அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து முதலியன.

(3) **காலம் காட்டும் இடைநிலைகள்** : த், ட், ற், இன், கிறு, கின்று, ஆநின்று, ப், வ், க் முதலியன.

(4) **சாரியைகள்** : அத்து, அல், அ, கு முதலியன.

(5) **உவமை உருபுகள்** : போல, புரைய, அன்ன, இன்ன, முதலியன.

(6) **சுட்டெழுத்துக்கள்** : அ, இ, உ

(7) **வினா எழுத்துக்கள்** : எ, யா, ஆ, ஓ, ஏ

(8) **செய்யுள் அசைகள்** : என், ஏ, அம்மா, அரோ முதலியன.

(188) பெயருரிச்சொல் என்றால் என்ன?

பெயர்ச்சொற்களைச் சார்ந்துவரும் உரிச்சொல் பெயருரிச் சொல் எனப்படும்.

(உ-ம்) : உறுமீன்
கடிமலர்

A. T. Ariyanayagam J.P.,U.M.
Chairman
Delft Pradesa Sabai

(189) வினையுரிச்சொல் என்பது யாது?

வினைச் சொற்களைச் சார்ந்து வரும் உரிச்சொல் வினையுரிச் சொல் எனப்படும்.

| | | |
|---|---|---|
| (உ-ம்) : | நனி | நல்ல |
| | சால | அரிது |
| | தவச் | சிறிது |
| | கடி | விடுவோம் |

(190) பண்புத் தொகைகள் பல மாறுதல்களை அடைவன.

| | | | | |
|---|---|---|---|---|
| நன்மை | + | ஆசிரியர் | = | நல்லாசிரியர் |
| பெருமை | + | அழகு | = | பேரழகு |
| பழமை | + | தமிழ் | = | பழந்தமிழ் |
| செம்மை | + | தாமரை | = | செந்தாமரை |
| பசுமை | + | சோலை | = | பசுஞ்சோலை |
| சிறுமை | + | ஊர் | = | சிற்றூர் |
| அருமை | + | உயிர் | = | ஆருயிர் |
| தண்மை | + | தேன் | = | தண்டேன். |
| தீமை | + | தண்டம் | = | தீத்தண்டம் |
| தொன்மை | + | நிறம் | = | தொன்னிறம் |
| நன்மை | + | ஆறு | = | நல்லாறு |
| நன்மை | + | கருமம் | = | நற்கருமம் |
| நன்மை | + | மரம் | = | நன்மரம் |
| நன்மை | + | மருந்து | = | நன்மருந்து |
| நெடுமை | + | கிரி | = | நெடுங்கிரி |
| நெடுமை | + | புயல் | = | நெடும்புயல் |
| பசுமை | + | கிளி | = | பைங்கிளி |
| பசுமை | + | தலை | = | பைந்தலை |
| பசுமை | + | தமிழ் | = | பைந்தமிழ், பசுந்தமிழ் |
| பசுமை | + | தொடி | = | பைந்தொடி |

| | | | |
|---|---|---|---|
| பழமை | + | தரு | = பழந்தரு (தரு மரம்) |
| பெருமை | + | அறிவாளன் | = பேரறிவாளன் |
| பெருமை | + | கடல் | = பெருங்கடல் |
| மும்மை | + | தமிழ் | = முத்தமிழ் |
| வளமை | + | அரசு | = வளவரசு |
| வன்மை | + | திறல் | = வன்றிறல் |
| வெண்மை | + | குடை | = வெண்குடை |
| வெறுமை | + | கையள் | = வெறுங்கையள் |
| வெறுமை | + | தேர் | = வெறுந்தேர் |
| வெறுமை | + | இடம் | = வெற்றிடம் |
| வெறுமை | + | இலை | = வெற்றிலை |

(191) பெயர்ப்பயனிலை கொண்ட வாக்கியங்கள்

(உ-ம்) : இலங்கை ஒரு தீவு
ஆசிரியர் மிகவும் நல்லவர்

(192) வினைப் பயனிலை கொண்ட வாக்கியங்கள்

உழவன் தன் வயல்களை உழுதான்

(193) எதிர் மறை வாக்கியங்கள்

i. எதிர் மறை இடைநிலை - அல்,இல், ஆ
ii. அவன் படித்திலன், கள்ளை உண்ணற்க

(194) பயனிலை தொக்கு நிற்கும் வாக்கியங்கள்

உ-ம் : i. மின்னுக்கெல்லாம், பின்னுக்கு மழை (பெய்யும்)
ii. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு (உண்டாகும்)

(195) கூட்டெழுவாய் வாக்கியம்

(உ-ம்) : இராமனும் இலட்சுமணனும் காட்டுக்குப் போனார்கள்.

(196) சொற்றொடர் எழுவாய் வாக்கியம்

(உ-ம்) : மதிமுகம் மலர்ந்தது.

(197) வாக்கிய இணைப்பு

i. (உ-ம்) : கோயிலுக்கு ஆசிரியர் வந்தார்.
கோயிலுக்கு மாணவர் வந்தனர்.

இணைப்பு : கோயிலுக்கு ஆசிரியரும் மாணவரும் வந்தனர்.

ii. அல்லது : (மாற்றுப்பொருள்)

(உ-ம்) : நான் சோறு உண்பேன்
நான் தேனீர் குடிப்பேன்.

இணைப்பு : நான் சோறு உண்பேன் அல்லது தேனீர் குடிப்பேன்.

ஓ - பொன்னோ பொருளோ தா.
ஆவது - பாலாவது கோப்பியாவது குடி
ஆ - அண்ணனா தம்பியா வென்றனர்.
ஆனால் - இடியிடித்தது ஆனால் மழை பெய்யவில்லை.

(198) கூட்டு உயிர்கள் எவை?

அஇ - அய் = ஐ
அஉ - அவ் = ஔ

இவை சந்தியக்கரம் எனவும் அழைக்கப்படும்.

(199) சார்பெழுத்துக்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| i. | உயிர் மெய் | vi. | ஆய்தம் |
| ii. | உயிர் அளபெடை | vii. | ஒற்றளபெடை |
| iii. | குற்றியலிகரம் | viii. | குற்றியலுகரம் |
| iv. | ஐகாரக்குறுக்கம் | vix. | ஔகாரக்குறுக்கம் |
| v. | மகரக்குறுக்கம் | x. | ஆய்தக்குறுக்கம். |

(200) பெயரடைத் தொடர்

ஒரு பெயரடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயரடைத் தொடராகும். இது பெயர்த் தொடரின் ஓர் உறுப்பாகச் செயற்படும்.

(உ-ம்)

அழகான, மிக அழகான, மிகமிக அழகான, மிகவும் அழகான, இங்கு அழகான, என்ற பெயரடை தலைமை உறுப்பாகவும் ஏனையவை அதற்கு அடையாகவும் வந்துள்ளன.

(201) வினையடைத் தொடர்

ஒரு வினை அடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினையடைத் தொடர் எனப்படும் .இது வினைத்தொடரின் ஒரு உறுப்பாகச் செயற்படும். சில உதாரணங்கள் வருமாறு :

வேகமாக, மிக வேகமாக, மிகமிக வேகமாக. இங்கு வேகமாக என்ற வினையடை தலைமை உறுப்பாகவும் ஏனையவை அதற்கு அடையாகவும் வந்துள்ளன.

(202) கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினான்.

மேற்காட்டிய அடியில் இடம் பெற்றுள்ள உயிர் மெய் நெட்டெழுத்துக்களாவன.

1. கா, பொ, மெ, னா 2. பொ, ன, மே, ண
3. கா, பொ, னி, னா 4. கா, மே, னா

(203) "உறவுகள் பிரிவதில்லை"

இத்தொடரில் இடம் பெற்றுள்ள மெய் உயிர்மெய் எழுத்துக்களின் வகைகள்.

1. வல்லினம், மெல்லினம் 2. இடையினம், மெல்லினம்
3. வல்லினம், இடையினம் 4. இடையினம் மட்டும்.

(204) "ரயிலுக்குப் போகவேணும் ரொம்ப நேரமாச்சு, கமலம் சுறுக்கா டம்ளரில் தண்ணீர் கொண்டு வா"

இத்தொடரில் இலக்கண ஒலிமரபிற்கமைய முதனிலையில் அமையாது தற்காலவழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொற்கள் எவை?

ரயிலுக்கு, ரொம்ப, டம்ளரில்.

(205) பின்வரும் சொற்களுள் "ப" கரத்தின் மாற்றொலி இடம்பெறும் சொல் எது?

1. அப்பம் 2. தம்பி 3. கப்பல் 4. தெப்பம்.

(206) பின்வரும் தொடர்களைச் சந்தி பிரித்து எழுதுக.

அ. "உழைத்துழைத் துண்ணாமற் சேமித்து
மாயுமிவர்களுக்கறிவுரை கூறுங்கள்"

உழைத்து + உழைத்து + உண்ணாமல் + சேமித்து + மாயும் + இவர்களுக்கு + அறிவுரை + கூறுங்கள்

ஆ. உன் மகனினி தாள்வான்.

உன் + மகன் + இனிது + ஆள்வான்.

(207) பின்வருவனவற்றுள் இயல்பாகப் புணர்ச்சியடையக் கூடிய சொற்களின் கீழ்க் கோடிடுக.

1. பெண் + அழகு 2. <u>ஆண் + அழகன்</u>
3. <u>ஊர் + எல்லை</u> 4. பூ + கொத்து
5. நெல் + நாற்று 6. <u>பார் + இவனை</u>

(208) பின்வருவனவற்றுள் மாற்றுப் பெயர் எழுவாயாக அமைந்துள்ள வாக்கியம்,

1. இராமன் காடு ஏகினான்.
2. <u>அவன் ஊரை மறந்தான்.</u>
3. கண்ணீரும் கம்பலையுமாக அலைந்தாள்.
4. அவனை நாய் துரத்தியது.

(209) பின்வருவனவற்றுள் "மை" விகுதி பண்புப் பெயரின் ஈற்றாக அமைந்துள்ள சொற்களின் கீழ்க் கோடிடுக ?

1. அண்மை 2. கண்மை 3. <u>நன்மை</u>
4. பன்மை 5. <u>இனிமை</u> 6. வெறுங்கை

(210) பின்வரும் பெயர்ச் சொற்களுள் கூட்டுப் பெயர்களின் கீழ்க் கோடிடுக.

1. பால்காரன் 2. <u>பாற்கஞ்சி</u> 3. பூக்கள்
4. பூக்கொத்து 5. <u>தமிழ்ப்பிள்ளை</u> 6. தமிழர்கள்

(211) பின்வரும் வினைகளுள் செயப்படு பொருள் குன்றிய வினைகள் எவை?

1. சிரித்தான் 2. படித்தான் 3. விழுந்தான்
4. அடித்தான் 5. துடித்தான் 6. எடுத்தான்

(212) பின்வருவனவற்றுள் "இரு" என்பது துணைவினையாக அமைந்துள்ள சொல் எவை? எது?

1. இருந்தேன் 2. வர இருந்தேன்
3. இருந்திருக்கலாம். 4. வந்திருந்தார்
5. சுகமாக இரு

(213) பின்வரும் தொடர்களில் இடம்பெறுகின்ற கூட்டப்பெயரடைகளின் கீழ்க் கோடிடுக.

1. புதிய பொற்காப்பு
2. உயர் குலத்தோர் வாழ வேண்டும்
3. நல்லாசான் கற்பித்தான்
4. அமிழ் தினும் இனிய தமிழ் மொழி
5. இன்முகம் காட்டி வரவேற்றான்
6. துடிதுடிப்பான இளைஞர்கள்

(214) பின்வரும் வாக்கியங்களுள் இலக்கண வழுக்களைக் கண்டறிந்து அவற்றைச் சரியான முறையில் திருத்தி அமைக்க.

1. கண்டி நுளம்புகள் இராச்சியமாக மாறுகின்றது. (நுளம்புகளின்)
2. அவன் கெட்டவன் என எல்லோருக்கும் தெரியும். (என்பது)
3. கொழும்பிலே சுமுகமான பரீட்சை நடைபெறுகின்றது. (சுமுகமாக)
4. ஆசிரியர் தான் நாளை வகுப்பு நடத்துவேன் எனக் கூறினார். (தாம்)

5. பாரதியார் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றும் இன்பமூட்டுவ தாய் இருக்கின்றன. (இருக்கின்றது)

(215) பின்வரும் தனி வாக்கியங்களைக் கீழ்க் காணப்படும் இணைப் பிடைச் சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி இணைக்க.

(ஆகவே, ஏனெனில், ஆனால், அல்லது, ஆனாலும், ஆவது).

1. நீ போக வேண்டும், நான் போகவேண்டும், இருவரும் போக முடியாது. (அல்லது)
2. இன்று மழை வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நான் குடை கொண்டு செல்ல வேண்டும். (ஆகவே)
3. நேற்று எனக்குச் சுகயீனமாக இருந்தது. நான் வேலைக்குச் சென்றேன். (ஆனாலும்)
4. அவர் எமக்கு மிகவும் நெருங்கிய உறவினர். அவரது மரணத்திற்கு நாங்கள் செல்லவில்லை. (ஆனால்)
5. எனக்குப் பசிக்கிறது. சோறு தாருங்கள். பானம் தாருங்கள். (அல்லது)

(216) பின்வருவனவற்றுள் பன்மை விகுதி பெற்று வழங்க முடியாத சொற்களைத் தெரிவு செய்க

1. மனிதன் 2. தண்ணீர் 3. அணி
4. அவன் 5. குளிர்

(217) மொழியின் முதலிலும், இறுதியிலும் வரும் வினா எழுத்து எது ?

(ஏ)

(218) பின்வருவனவற்றுள் உயிர்முன் உயிர்வரும் புணர்ச்சிக்கு உதாரணம் எது?

1. இடி + ஓசை  2. அடித்து + நின்றான்
3. பாடி + முடித்தான்  4. எடுத்து + கொடுத்தான்

(219) வாழ்ந்தான் என்னும் வினைப் பகுபதத்தின் பகுதி.

1. பெயர் 2. வினை 3. இடை 4. உரி

(220) பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைகளைப் கொண்டமைந்த வாக்கியங்களைத் தெரிந்து கோடிடுக.

1. நான் பாடம் படித்தேன்.
2. இராமன் பல்கலைக்கழகம் சென்றான்.
3. இராணி பழம் சாப்பிட்டாள்.
4. மின்விசிறி சுழன்றது.

(221) பின்வரும் வாக்கியங்களுள் கூட்டெழுவாய் அமைந்த வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. நான் விளையாடினேன்
2. செய்வன திருந்தச் செய்
3. நானும், அவனும், அவளும், மைதானத்தை நோக்கிச் சென்றோம்.
4. மாணவர் கற்பது அவசியம்.

(222) "நான் தொலைத்த மோதிரத்தை எடுத்துக் கொண்டேன்" இங்கு எடுத்துக் கொண்டேன் என்பது,

1. தெரிநிலை வினை  2. குறிப்பு வினை
3. கூட்டுவினை  4. தனி வினை

(223) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

"சிறியாருணர்ச்சியுளில்லைப் பெரியாரைப் பேணிக் கொள்வோம் என்னும் நோக்கு"

சிறியார் + உணர்ச்சியுள் + இல்லை + பெரியாரை + பேணி + கொள்வோம் + என்னும் + நோக்கு.

(224) "கடற்கரையிற் காணப்பட்ட மணல் மேடுகளில் விரிசோதியின் தண்கதிர் பட்டுத்தெறித்தது"

இவ்வாக்கியத்தில் வினையும், பெயரும், சேர்ந்து வருவதற்கு உதாரணமாகக் கொள்ளக் கூடியது,

1. கடற்கரை
2. மணல் மேடு
3. விரி சோதி
4. தண்கதிர்

(225) நோயாளியான அவன் குடிப்பழக்கத்தைக் கைவிடவில்லை. இவ் வாக்கியத்தில் விகுதியின் மூலம் ஆண்பாலை உணர்த்தும் பெயர்ச் சொல் எது?

அவன்

(226) "எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்" இத்தொடரில் இடம் பெற்றுள்ள முழுமை மாற்றுப் பெயர்.

1. நாடு
2. எல்லாரும்
3. மன்னன்
4. இந்நாட்டு

(227) பின்வருவனவற்றுள் "க" கரத்தின் மாற்றொலியன் இடம் பெற்றுள்ள சொல்லைத் தெரிவு செய்க.

1. கன்று
2. கப்பல்
3. காகம்
4. கடமை

(228) பின்வருவனவற்றுள் பின்னொட்டுக்களைக் கொண்டுள்ள சொல் எது?

1. வா 2. குருவி 3. உண்டு 4. உண்டான

(229) "மிக அழகான பூ மலர்ந்தது" என்பதில் இடம் பெற்றுள்ள அடை

1. பெயரடை 2. வினையடை
3. பெயரடைத் தொடர் 4. வினையடைத்தொடர்

(230) "அ" கரத்திற்கு "ஆ" காரம் இனமாவது போன்று "ஐ" காரத்திற்கு இனமாகும் எழுத்து ?

1. ஈ 2. ய் 3. எ 4. இ

(231) பின்வரும் பாடலடியை சந்திபிரித்து எழுதுக.

1. "பொம்மென்ன வண்டலம்பு ம்புரி குழலை"
2 "பொள்ளென வாங்கே புறம் வேரள்"
3. "எம்பியை யீங்குப் பெற்றேன் னென்னெனக் கரிய தென் றான்"

1. பொம் + என்ன +வண்டு + அலம்பும் + புரி +குழல் +ஐ
2. பொள் + என + ஆங்கே + புறம் + வேரார்.
3. எம்பி + ஐ + இங்கு + பெற்றேன் + என் + எனக்கு + அரியது + என்றான்.

(232) பின்வரும் சொற்கள் நான்கும் "கு" என்னும் வேற்றுமை உருபை ஏற்கும் போது எவ்வாறு மாற்றமடையும்?

1. நான், கு 2. அவன், கு 3. நாம், கு
4. நீ, கு 5. நீங்கள், கு 6. நீர், கு

1. நான் + கு = எனக்கு
2. அவன் + கு = அவனுக்கு.

3. நாம் + கு = எமக்கு
4. நீ + கு = உனக்கு
5. நீங்கள் + கு = உங்களுக்கு
6. நீர் +கு = உமக்கு / நுமக்கு

(233) "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்று திருவள்ளுவர் குறப்பிட்டார் இதில் வரும் "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது,

1. தொடர் மொழி
2. <u>உட்டொடர்</u>
3. பெயரடை
4. அல்வழித்தொடர்

(234) "வான்மீகி இராமாயணத்தைப் பாடினார்" என்பது,

1. விருப்பு வாக்கியம்
2. ஏவல் வாக்கியம்
3. உணர்ச்சி வாக்கியம்
4. <u>செப்பு வாக்கியம்</u>

(235) "கபில பரணர் கவிதை யாத்தனர்" என்பதில் வந்துள்ள எழுவாய்,

1. <u>கூட்டெழுவாய்</u>
2. சொற்றொடர் எழுவாய்
3. தன் எழுவாய்
4. தோன்றா எழுவாய்

பின்வரும் வாங்கியங்களில் உள்ள வழுக்கள் எவை ? அதனைத் திருத்தி எழுதுக.

(236) அவர்கள் வசிக்கும் வீடுகளானது மிகவும் நன்றாயிருக்கும்.

<u>**எண் வழு**</u>

அவர்கள் வசிக்கும் வீடுகளானவை மிகவும் நன்றாயிருக்கும்

(237) நன்மையும் தீமையும் நாடி அதனுள் மிகை நாடி மிக்கது கொள்க.

<u>**எண் வழு**</u>

நன்மையும் தீமையும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்கது கொள்க.

(238) கதிர் அறுப்பவர்கள் உச்சி வேளையில் கஞ்சி சாப்பிடப் போவார்கள்.

<u>மரவு வழு</u>

கதிர் அறுப்பவர்கள் உச்சி வேளையில் கஞ்சி குடிக்கப் போவார்கள்.

(239) கூட்டத்திலிருந்த படத்தை இங்கு மாட்டியது யார் ?

<u>திணை வழு</u>

கூட்டத்திலிருந்த படத்தை இங்கு மாட்டியவர் யார் ?

(240) ஒரு மனிதன் குளத்திற்குச் சென்று ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்தான்.

<u>மரவு வழு</u>

ஒருவன் குளத்திற்குச் சென்று ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்தான்.

(241) காலச் சக்கரம் சுழன்றன. உலக நிலை மாறியது.

<u>எண் வழு</u>

காலச் சக்கரம் சுழன்றது. உலக நிலை மாறியது.

(242) முட்டாட்டாமரை என்பதனை சந்தி பிரித்தெழுதுக ?

முள் + தாள் + தாமரை

(243) வழுவமைதி என்பது யாது ?

வாக்கிய அமைப்புக்கள் திணை, பால் எண், இடம் காலம், மரபு, ஆகியவை பற்றி சிறிதே வழுவாயினும் அவற்றை வழுவராது போலவே ஆன்றோர் வழங்குவர் அவ்வாறு ஆன்றோரால் வழங்கப்படுவனவற்றை வழுவமைதி எனக் கொள்ள வேண்டும்.

உதாரணம் :- "திங்களும் சான்றோரும் ஒப்பர்."

இங்கு சான்றோர் உயர்திணை, திங்கள் அஃறிணை இரண்டும் சேர்ந்து உயர்திணை முடிவைப் பெற்றது. எனவே இது திணை வழுவமைதி.

(244) பெயரிடை நிலை என்றால் என்ன ? உதாரணம் தருக.

பெயர்ச் சொற்களை உண்டாக்க பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இரண்டையும் இணைப்பதற்குரிய எழுத்துக்கள் சில தோன்றும்.

அவை பெயரிடை நிலை எனப்படும்.

| | | |
|---|---|---|
| உதாரணம் :- அறிஞர் | - | ஞ் |
| வலைச்சி | - | ச் |
| பாணத்தி | - | த் |

(245) பகுதி எவ்வாறு காலம் காட்டும் ?

பகுதிகள் தம் ஒற்று இரட்டித்து காலம் காட்டும்

விடு - விட்டான்
புகு - புக்கான்

(246) ஒன்றொழி பொதுச் சொல் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

உயர்திணைக்குரிய ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் பொதுவாக நிற்கும் பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் வாங்கியங்களில் அமையும் போது குறிப்பால் பாலை உணர்த்தும் இது ஒன்றாழி பொதுச் சொல் எனப்படும்.

உதாரணம் :- மக்கள் போர் செய்தனர்.

இங்கு மக்கள் என்னும் பொதுப் பெயரும் செய்தனர் என்னும் பொது வினையும் போர் எனும் குறிப்பால் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின.

(247) இணங் குறித்தல் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

சில சொற்கள் தன் பொருளை உணர்த்துவதோடு தம் இனத்தையும் சேர்த்து உணர்த்தும் இச் சொற்கள் இனங் குறித்த சொற்களாம்.

உதாரணம் :- சோறு உண்டான்.

இங்கு சோறு என்னும் பெயர் கறி, குழம்பு, பொரியல், முதலிய இனமான வற்றையும் சேர்த்தே உண்டான் எனப் பொருள்படும்..

(248) மோனைத் தொடையாவது யாது ?

முதலெழுத்துக்கள் ஒன்றி வருவது மோனைத் தொடை எனப்படும்.

உதாரணம் :- காதலியைக் கானகத்தே காரிருளில்.

(249) எதுகைத் தொகையாவது யாது ?

இரண்டாம் எழுத்து ஒன்றில் வருவது எதுகைத் தொகையாகும்.

உதாரணம் :- நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

(250) அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண் வற்றன் மரந்தளிர்த் தற்று

இதில் இடம் பெற்றுள்ள அணியாது ?

இல் பொருள் உவமை அணி.

Chairman

0232250975

Type setting

**ADDICTION**
**PUBLLICATIONS**
21, A.G. Hinni Appuhamy Mw.
Colombo 13.
Tel : 434221

கிடைக்குமிடம்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

340, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
தொ. பே. 422321